
# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை


6 27.5-70 45



தமிழக மேலவைக்கு நியமன உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோவை மாவட்டச் செயலாளர் திரு. S. A. இராசமாணிக்கம் அவர்கள் 22—4—70ல் பதவியேற்ற காட்சி.


விலை 20 காசு

24-5-70

# கேட்டீரா/ சேதி!

## கோத்திர மறந்து...

சிண்டிகேடு காங்கிரஸ், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் 1972ல் எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு சுப்பிரமணியனார் ஒரு கோடி காட்டியிருக்கிறார். தி.மு.க.-வுடன் உறவில்லை என்று திட்ட வட்டமாகக் கூறிவிட்டது அவரது பேராண்மையைக் காட்டுகிறது. "உங்கள் கூட்டணியில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று எங்கே அவர் கேட்டுவிடப் போகிறாரோ என்ற நம் அச்சத்தைத் தவிர்த்து விட்டிருக்கிறார் அவர். நாம் மனதாரப் பாராட்ட வேண்டும் அவரை! இப்போதைய அவரது காங்கிரஸ் மிகவும் ஏழைக் கட்சியாம்! இந்த ஏழைக் கட்சிக்குக் கழகம் கை கொடுக்காதாம்! வெட்கத்தை விட்டுதான் சொல்லி இருக்க வேண்டும். இன்னொரு ஏழைக் கட்சியான பி, சோ. – வுடனும், வலது கம்யூனிஸ்டுக் கட்சியுடனும், பாரதீய கிரந்தி தளத்துடனும் கூட்டுறவு கொள்ளவேண்டும் என்கிறார். வீட்டாளும் மகராசிகளைக் கொள்ளவே, குலம், கோத்திரம் பார்க்க வேண்டும் என்பார்கள். நாடாளும் நல்லவர்களைக் கொண்டு வரும் முன்பு மட்டும் அவைப் பார்க்கப் படாதோ!

## மனச்சாட்சி என்ன செய்யும்?

இந்தியத் துணைக்கண்டத்து அரசியலும், அரசியல் கட்சியின் அங்கத்தினர்களும் எவ்வளவுபெரிய ஜனநாயகவாதிகள், என்பதை அகிலத்துக்கு அறிவிக்கும் வகையில், விரைவில் நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவரவிருக்கிறார்கள். ஜனநாயகம் என்பது எப்படி எல்லாவற்றுக்கும் அதாவது கிணறு ஒன்றிலிருந்து நீரெடுக்கவும், அதற்குள் கற்களைத் தூக்கிப்போடவும் இடந்தருகிறதோ, அதேபோல எல்லாவற்றிற்கும் இடந்தரும் சித்தாந்தமாகும்! ஒரு நிறுவனத்துக்குள் குழப்பங்களை மூட்டிக்கொண்டிருக்கவும் அது வழிகாட்டும்; சிறப்புற நடைபெற்று சீருறவும் இடந்தரும். ஆக்க முறையிலும் வழிகாட்டும்; அழிவுக்கும் இட்டுச் செல்லும்! அதுபோலவேதான் ஜனநாயகவாதிகளும், அவரவர்களது அரசியல் கட்சிகளும்! ஜனநாயகச் சிந்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டவர்கள் இரண்டு இயல்புக்கும் உட்படுபவர்கள் இல்லையா? இன்று ஒரு கட்சி, நாளை ஒரு கட்சி, நாளை மாலை ஒன்று, இரவு ஒன்று என்று கட்சி மாறிக்கொண்டே இருப்பதற்குக் கூட அரசியலும், ஜனநாயகமும் இடந்தருவதை எப்படி மறுக்க முடியும்! அரசியல் கொள்கைகளை ஒருவன் தேர்ந்தெடுத்துக்கொள்வது என்பது அவனது பிறப்புரிமையாகும்! நீ இந்த அரசியல் இயக்கத்தில்தான் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று எவரும் எவனையும் கட்டுப்படுத்த முடியாது, இதில் தலையிடுவதாக விமர்சிக்கப்படும். நீதிமன்றங்கள்கூட தங்கள் தங்கள் வாதத்தின் வலிவைக் காட்டும். இதை எல்லாம் உணர்ந்திருப்பதனால் தான் நம் நாட்டு அரசியல்வாதிகள், தங்கள் மனம்போன போக்கில் நாளைக்கொரு கட்சி, வேளைக்கொரு அரசியல் என்று ஆடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பெயரும் ஜனநாயகம் தான்! இந்தக் கொடுமைகளைத் தடை செய்யவேண்டும் என்று நல்லவர்கள் நினைப்பதும் ஜனநாயகத்தின் அடிப்படையில்தான்! காப்பாற்றி வேண்டும் என்று முண்டியடித்து வருவதும் ஜனநாயகத்தைத்தான்! ஜனநாயகம் என்பது என்னவோ நம்மிடத்தில் படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறது. என்றாலும் இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த விரைவில் நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டுவரவிருக்கிறார்கள். மெஜாரிட்டி வாக்களித்தால்தானே சட்டம்நிறைவேற முடியும். வாக்களிக்க உரிமை படைத்தவர்களையே கட்டுப்படுத்துவதற்காகத்தானே இந்த மசோதாவே கொண்டுவரப்படுகிறது! ராஜமானிய ரத்து மசோதாவுக்கே, பலமன்னர்கள் எதிர்த்து வாக்களிக்கப் போகிறார்களாம். ஏற்கெனவே ஐ. சி. எஸ். தொடர்பான ஒரு மசோதாவின் முன் அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அரசியல் கட்சியினர். கட்சி தாவுதலைத் தடுத்துக் கொண்டுவரப்படும் மசோதாவின் கதி எப்படியாகுமோ! "மனச்சாட்சி"கள் எதுவும் குறுக்கிடாமலிருக்க வேண்டும்! இருக்குமோ! மசோதா நிறைவேறுமோ!

## இரங்கத்தக்க தலைமை!

இந்திரா காந்தியின் கட்சியிலிருந்து, அக்கட்சியின் தலைவர் ஜகஜீவன்ராம் அவர்களால் சஸ்பெண்ட் செய்யப்பட்ட பி. ஜி. பட்நாயக், "எஜமானத்துவ பிடிப்பிலிருந்து விடுதலை" கிடைத்திருப்ப

(13-ம் பக்கம் பார்க்க)


**தனிச் சலுகை**

அஞ்சல் செலவு இலவசம்

●

எந்தப் புதிய தமிழ் நூல் தேவைப்படினும் எங்களுக்கு எழுதிப் பெறுக.

●

விலைப் பட்டியலுக்கு எழுதும்போது பிடித்தமாக நூல்வகையைக் குறிப்பிட்டு எழுதுக.

●

ரூ. 1-க்கு குறைந்த விலையுள்ளவைகளுக்கு பத்து காசு சேர்த்து அனுப்புக.

**ஜெய்ஹிந்த் ஏஜன்சீஸ்,**
புத்தக விற்பனை நிலையம்,
கடத்தூர் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 24—5—70 | இதழ் 45


## வன்முறைகள் ஒழியுமா?

இந்தியத் துணைக்கண்டத்தின் அமைதி பல்வேறு காரணங்களால் பாழ்பட்டுக்கொண்டிருக்கிற போக்கு நாளும் நாளும் வளர்பிறையாகிக்கொண்டிருக்கிறது.

அரசியல் சிறுமைத்தனம் படுத்துகிற பாடும், மதவெறி ஏற்படுத்துகிற பயங்கரத் தன்மையும் துணைக் கண்டத்தை எந்த வழியில் நடத்திச் செல்ல முயல்கின்றன என்ற கணிப்பின் முடிவு, விரும்பத்தக்கதாயில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தின் புகழுக்குச் சிகரமாயிருந்துகொண்டிருப்பது, காந்தியத் தத்துவங்களே யாகும். இந்தத் தத்துவங்களில் மனம் பதித்த காரணத்தாலேயே, அந்தத் தத்துவங்கள் இந்தத் துணைக் கண்டத்தில் பிறந்த ஒருவரால் கொடுக்கப்பட்டவை என்பதனாலேயே இந்நாடும் போற்றற்குரியதாகஇருந்து வந்திருக்கிறது.

காந்தியடிகளது இன்னுயிரை, எந்த வெறித்தனம் இடித்துக் களித்ததோ, அதுவே இப்போது நாடெங்கும் பேயாட்டமாடிக்கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டுக் காலமாகவே மதவெறி மெள்ள மெள்ள புகைந்துகொண்டிருந்து, சிலபல தீய நிகழ்வுகளையும் உண்டாக்கிக்கொண்டிருந்துவிட்டு கடந்த சில வாரங்களாக தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. இவை காரணமாகப் பரவலாக இரண்டாயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொத்துக்களையும், உடைமைகளையும் இழந்து அனாதைகளாகி இருப்போரது எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டால், அது ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப் போதுமானதாக இருக்கக்கூடும்.

இவையெல்லாம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதுபற்றி எவரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. தலைமைப் பொறுப்பிலிருக்கிற காரணத்தால்; நிகழ்வுகள் ஏற்படுகிறபோது மேடையேறி நின்று சில கண்டனச் சொற்களை உகுத்துவிட்டுப் போய்விடுவதன் மூலமே அனைத்தும் தீர்ந்துவிடும் என்று கருதிச் செயல்படுகிறார்கள்.

நிற வேறுபாடு காட்டிச் செயல்படும் ஆப்பிரிக்காவை நாம் கண்டனம் செய்யத் தவறியதில்லை. நமது கண்டனங்களிலே அனைத்தின் நீதியை எல்லாம் எடுத்துக்காட்டி, ஆகுமா? அடுக்குமா என்றெல்லாம் கேட்டிருக்கிறோம்!

அண்மையில் ரொடீஷியாவில், கலவரம் ஏற்படவில்லையென்றால் சிறுபான்மை வெள்ளையர், பெரும்பான்மை தேசிய இனத்தவரை ஆளத்தொடங்கிய நிகழ்ச்சியையே நாம், அக்கிரமம், அநீதி என்று கண்டனக் கணைகளால் தாக்கி இருக்கிறோம்.

உலகத்துக்கெல்லாம் சீலம் போதித்துக்கொண்டே, தன்னிடம் 'சீழ்' ஒழுக விட்டுக்கொண்டிருக்கும் கேவலம், இந்தத் துணைக்கண்டத்துக்குத் தொடர்ந்து இருந்தாகவேண்டியதுதானா என்பதை, நாட்டவர் சிந்தனைக்கு எடுத்துக்கொண்டால் நல்லது.

அற்ப காரணங்களுக்காகவெல்லாம் கலவரங்கள் மூள்கின்றன. கலவரங்களின் போக்கும், நடைமுறையும் பல சந்தர்ப்பங்களில் திட்டமிட்டு நடத்தப்படுபவைபோல் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் நடத்திவைக்கப்படுவதற்காகவே சில அரசியல் கட்சிகளும் இருந்துகொண்டிருக்கின்றனவோ என்றெல்லாம் என்ன தோன்றுகிறது.

ஒரு சிறுபான்மை சமூகம், தன் காலமுற்றும் பிற்போக்குச் சமூகமாகவே இருக்கவேண்டும் என்ற குறுகிய மனம், பெரும் அளவுக்குப் பல்கிக்கொண்டிருப்பது அல்லது வளர்த்துவிடப்படுவதுதான் இவற்றுக்கெல்லாம் ஆணிவேராக இருக்கின்றதென்பதை உணரமுடிகிறது. இதே சமயம் பெரும்பான்மை சமூகம், பல உயர்நிலைகளை எட்டிக்கொண்டிருப்பதனை ஆற்றமாட்டாத போக்கு நெருக்கடி காரணமாக ஏற்பட்டுவிடுவதனாலும் இந்த நிலைமைகள் தோன்றுகின்றன.

மீண்டுமொரு காந்தியடிகள் பிறந்து இந்த வன்முறைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் பணியினைப் போதிக்க முடியும் என்று எதிர்பாக்க முடியாது. அப்படி ஒருவர் பிறக்கப்போவதுமில்லை. எனவே, வருங்காலம் உலகத்தின் கண்ணோட்டத்தில் இனவெறி ஒன்றின் மூலம் தன் செல்வாக்கை இழந்துவிட நேர்ந்தால் அது வியப்பதற்குறியதாக இராது என்று நிச்சயம் கூறலாம்!

## பொதுத்தேர்தல் நடக்குமோ?

மேற்கு வங்காளத்தில் மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி, பார்வர்டு பிளாக், சோஷலிச ஐக்கிய கட்சி, ச, சோ., பி, சோ., புரட்சிக் கம்யூனிஸ்டுக் கட்சி; கூர்க்கா லீக், போல்ஷெவிக் கட்சி முதலிய எட்டுக் கட்சிகள் கூடி கோரிக்கை வெளியிட்டுள்ளன.

பொதுத் தேர்தல் மூலம், மீண்டும் அங்கு ஒரு ஜனநாயக ஆட்சியை நிறுவ, அவை காட்டும் அக்க

(13-ம் பக்கம் பார்க்க)




[25]

"காதலி!" என்றார் குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அது என் அண்ணனின் குரல்! அவளும் திரும்பினாள். நானும் சத்தம் வரும் திக்கில் திரும்பினேன். "ஒழிந்தான் உன்னை ஆட்டிப் படைத்த தூர்த்தன். இதோ அவனுடைய இரத்தம் ஒழுகுவது கண்டு களி. உன் கோபத்தையும் சோகத்தையும் இந்தச் செந்நீரால் கழுவிக் கொள்" என்று கூறிக்கொண்டே என் சகோதரர் அங்கு வந்தார். நானும் அவளும் ஏககாலத்தில், ஆ! என்று அலறினோம். என் அண்ணனின் கரத்திலே, குலகுருவின் தலை தொங்கிற்று உடலற்று! இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது.

போர்க்களங்களிலே, தலை வேறு உடல் வேறாக அறுபட்டதையும், இரத்தம் ஆறென ஓடினதையும், குருதி தோய்ந்த கரத்துடன் வீரர்கள் நிற்பதையும் நான் கண்டதுண்டு, கலங்கியதில்லை. ஆனால் நடுநிசியில், அரண்மனைப் பூங்காவில், அரசகுமாரன், குலகுருவின் தலையை வெட்டி, இரத்தம் ஒழுக ஒழுகப் பிடித்துக்கொண்டு நிற்பதை யார்தான் கண்டு கலங்காதிருக்க முடியும்! கலை இன்பத்திலே திளைத்திருக்கிறார் அண்ணன் என்று எண்ணிக் கொண்டிருந்த எனக்கு அவர் கொலைத் தொழிலும் செய்வது காணக் கூசிற்று. அந்த இரவு, நிலவொளியிலே நான் கண்ட காட்சியை நினைத்தால் இப்போதும் நடுக்கம் பிறக்கிறது.

"நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று அவர் என்னைக் கேட்டார், பயத்தால் மெய்மறந்து நின்றேன். என்னை இக்கேள்வி கேட்டுவிட்டு அவர், தலையைக் கீழே போட்டார். அந்தச் சத்தம், எனக்கு என் நிலைமையைக் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

"நான் உலவிக்கொண்டிருந்தேன். இசை கேட்டது. இங்கு வந்தேன், இதைக் கண்டேன்" என்று நான் படபடத்துக் கூறினேன். அவர், மேலங்கியால் முகத்தைத் துடைத்துக்கொண்டார். அவளோ, பதுமைபோலாகிவிட்டாள். அசைவற்று நின்று கொண்டிருந்தாள். கண்களிலே நீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது.

"தவக்கோலத்திலே உள்ள இக்காரிகை என் காதலுக்கு உரித்தானவள். இவளுடைய உடைக்கு இவள் பொறுப்பல்ல. காவியால் மூடி இவளுடைய கருத்தைத் தூங்க வைக்கலாம் என்று, இக்காதகன் கருதினான். இவனுடைய கபடத்தைத் தெரிந்து நான் இக்காரியம் செய்தேன்" என்று அண்ணன் கூறினார். எனக்கு அவருடைய விளக்கம் திருப்தியை உண்டாக்கவில்லை. மனச்சாந்தி ஏற்படாததால், நான், கீழே உருண்டு கிடந்த தலையையும், உக்கிரத்துடன் என் எதிரே நின்ற சகோதரனையும், நீர் புரளும் கண்களுடன் நின்ற அந்த நங்கையையும் மாறி மாறி நோக்கினேன். மருட்சியால் மயக்கம் வந்துவிடும் போலிருந்தது எனக்கு. வேடிக்கையைக் கேள் 'நடனா! நான் இப்படித் தவித்துக் கொண்டிருந்தேனே, அதை ஒரு துளியும் பொருட்படுத்தாது. என் அண்ணன் அந்த அணங்கை அருகே இழுத்து அணைத்துக்கொண்டு, கண்களை துடைத்து, "அஞ்சாதே! உன் அழகை ஆயுதமாகக் கொண்டு அக்ரமச் செயல் புரிந்து வந்தவன் அழிந்தான். இனி உன் வாழ்வு மலரும், மனம் மருளாதே" என்று கூறித் தேற்றினான். நான் ஒருவன் நிற்பதையும் அண்ணன் மறந்துவிட்டார். காலடியிலே உருண்டு கிடந்த குரு தலையேகூட அவருக்குத் தெரியவில்லை. இந்நிலையில் என் தகப்பனார் மன்னர்

திடீரெனச் சில காவலர்களுடன் அங்குவரக் கண்டேன்.

"அண்ணு! அரசர்!" என்று கூறினேன் அச்சத்துடன், அந்த மங்கை. என் அண்ணனின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அவ்விடத்தை விட்டு ஓடிவிடப் பார்த்தாள். புன்சிரிப்புடன் என் அண்ணன் அவள் கரத்தை பிடித்திழுத்து நிற்கவைத்து. "நில் ஏன் ஓடுகிருய்?" என்று கேட்டார் இதற்குள் மன்னன் அங்கு வந்து சேர்ந்துவிட்டார். அவர் பேசுமுன்னம்' எனக்குப் பயத்தால் பாதி உயிர் போய்விட்டது.

"தவமணீ! நீ இங்குதானு இருக்கிருய். உன் தாளிணை வணங்குகிறேன். குருத்துரோகம் செய்த இக்கொலை பாதகனை. நொடியிலே நான் வீழ்த்துகிறேன். நீ பிழை பொறுத்துப் பாண்டிய மண்டலத்தின்மீது பகை காட்டாது விடு, அம்மையே" என்று கூறிக்கொண்டே என் பிதா, காவி உடைக்காரியின் காலில் விழலானுர். அவள் அதைத் தடுத்து அவரைத் தூக்கி நிறுத்தலுள். இதற்குள் காவலர் உருண்டு கிடந்த தலையை எடுத்து ஓர் பீதாம்பரத்தில் மூடிப் பிடித்துக்கொண்டனர். இரு காவலர் உருவிய வாளுடன் என் அண்ணனின் இரு மருங்கிலும் நின்று கொண்டனர். அவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்ததில், என் தந்தை, என் அண்ணனைக் கைது செய்யத் தீர்மானித்துவிட்டார் என்பது விளங்கிற்று.

"குருதேவனைக் கொலை செய்துவிட்டார் உமது மூத்த குமாரன்" என்று யாரோ சீடர் கூறிடக் கேட்டு கொதித்தெழுந்த என் தந்தை, என் அண்ணனைத் தேடிப் பார்த்து, தோட்டம் வந்தார். அங்கு, குருவின் தலை உருண்டுக் கிடந்ததைக் கண்டார். குருவின் புத்திரி, தவமணி அங்கு இருக்கக் கண்டு, அவளுடைய தபோ பலத்தால் மண்டலத்தையே நிர்மூலமாக்கி விடுவாள் என்று பயந்து, அவளைப் பணிந்து, மன்னிப்புக் கோரி நின்ருர்.

தவமணியின் கோலம் ஒன்று, செயல் வேறு; அது எனக்குக் கோபமூட்டிற்று; என் பிதாவோ, அவளுடைய கோலத்தைக் கண்டு மதி மயங்கி மண்டியிடுகிருர். என் அண்ணனே அவளுடைய அழகிலே சொக்கிக் கொலையும் புரிந்துள்ளார். இவ்வளவு நிகழ்ச்சிகளையும் நினைப்பையும் கிளறிவிட்ட அந்த நங்கை' என் பிதாவை நோக்கி, மிருதுவான குரலில் சில சொல் புகன்ருள்.

"அரசே! என் பிழை பொறுத்தருள வேண்டும். நான் தவசியுமல்ல, யோக சித்திகள் பெற்றவளுமல்ல. எவனுடைய தலை கீழே உருண்டு கிடப்பதற்காகக் கோபங் கொண்டு தாங்கள், தங்களின் மூத்த புதல்வர்மீது பாய்ந்திட வந்திருக்கிறீரோ, அந்தக் கபடசன்யாசிக்கு நான் மகளுமல்ல! அவனுடைய கருவியாக இருந்துவந்தேன். எங்கோ மரத்தடியிலே கிடந்த ஓர் குழந்தை, பார்க்க ரம்மியமாக இருப்பது கண்டு, தவவேடம் புனைந்து தந்திரத்தால் வாழ்ந்து வந்த சத்யபிரகாசர் எடுத்து வளர்த்துவந்தார்; அந்தக் குழந்தையின் எழில் வளர, வளர, அவனுடைய புகழும் செல்வாக்கும் வளரலாயிற்று. பல இடங்களில் சுற்றித் திரிந்துவிட்டு, இங்கு வந்து சேர்ந்தோம். ஆம்! நான்தான், அவன் கண்டெடுத்த குழவி. இங்கு அவன், தங்களை எப்படியோ மயக்கினுன், என்னையும் பெரிய யோகி என்று கூறித் தங்களை நம்பிடச் செய்தான். இளமையும் எழிலும் இருந்தும், தவவேடமும் கபடத்துக்கு உடைந்தையுமாக நான் காலங்கழித்து வருகையிலே, உமது புதல்வரின் கண்கள், என் காவி உடையைக் கிழித்தெறிந்து, என் இருதயத்திலே இயற்கையான எண்ணங்கள் தழுவுவதையும் பர்ணசாலையிலே பாழாகிக் கிடக்கும் வாழ்வை நான் வெறுக்கிறேன். என்பதையும் தெரிந்துகொண்டன. ஆமாம்! கடலிற் குளித்து முத்து எடுக்கும் பணியாளே எங்கு குளித்தால் முத்து கிடைக்கும் என்பதை அறிவான். அதுபோலத்தான் அவர் என் அகத்தை மறைத்துக்கொண்டிருந்த புறக்கோலத்தால் மயங்காது, என்னைக் கண்டறிந்தார், என் மனம் அவரை நாடிற்று. என்னைப் பூஜிக்கப் பலர் வந்ததுபோலவே அவரும் வந்தார். ஆனல் என் தவவேடத்தைப் பூஜிக்காமல், என் அன்பை வேண்டினுர்; நான் அளித்தேன் அகமகிழ்ச்சியுடன். தவக்கோலத்திலேயே நான் அவருக்குப் பிரியையனேன். சத்யப்பிரகாசர் இதனை எப்படியோ தெரிந்துகொண்டார். தெரிந்துகொண்டால் என்ன? என்னை என்வழிப்படி விட்டுவிடலாம். இல்லையேல் இயகிருந்தால்தானே, இது நடக்கும், இனி வேறு இடம் செல்வோம் என்ருவது இங்கிருந்து கிளம்பிவிட்டிருக்கலாம்; இல்லையேல், என் அன்பரை அழைத்து, அறிவுரை புகன்று தடுத்திருக்கலாம். அதுவும் இஷ்டமில்லையேல், என்னைக் கொன்றுவிட்டிருக்கலாம். இவை எதையுஞ் செய்யாது, என்ன செய்தார் தெரியுமோ! எந்த மடியிலே, நான் சிறு குழந்தையாகப் படுத்துக்கொண்டு தூங்கினேனே, அதே மடியிலே, சாய்ந்துகொண்டு, மையல் ஊட்டவேண்டுமென்று கட்டளையிட்டான். மகளாக இத்தனை காலம் இருந்தபோதும், இனி எனக்கு மனையாளாகிவிடு என்று கூறினுன். என்னைக் கேட்டானு இதுபோல், இல்லை சொல்லைச் செலவிடவில்லை. ஓரிரவு பக்தகோடிகள் போய் விட்ட பிறகு, நான் படுத்துக்கொண்டிருந்த அறையிலே மினுக்கிக்கொண்டிருந்த தீபம் அணைந்தது; அணைக்கப்பட்டது. ஓர் உருவம் என் மஞ்சத்தருகே நின்றது பெருமூச்சுடன். நான் "அப்பா!" என்று அலறினேன். அந்த உருவம், கலகலவெனச் சிரித்திடக் கேட்டுச் சித்தம் மருண்டது. சத்யபிரகாசரே அங்கு வந்து நின்றவர். என்னை வளர்த்த தந்தையே விளக்கை அணைத்துவிட்டு அங்கு நின்ருர் என்பது தெரிந்தது, என் திகில் கொஞ்சம் நீங்கிற்று, நான் மஞ்சத்திலே எழுந்து உட்கார்ந்துகொண்டு, "என்னப்பா இது? இப்படி மிரட்டிவிட்டீர்" என்று கேட்டேன். அவர், என் பக்கத்திலே வந்து உட்கார்ந்தார். தான் வழக்கமாக அவரிடம் நெருங்குவதுபோல் நெருங்கினேன். அவரோ என்னை என்றும் அணைத்திராதவிதமாக அணைத்தார், "அப்பா" என்று அழைத்தேன். அவரோ "மகளே" என்று அழைக்காமல், தவமணி என்று அழைத்தார். குரலிலே ஓர் மாதிரியான தழதழப்புத் தென்பட்டது. அவருடைய முகத்தைச் சரியாகப் பார்க்க விரும்பி, அணைப்பிலிருந்து விடுபட முயன்றேன். அவரோ என்னை இறுகப் பிடித்துக்கொண்டார். எனக்குத் திகில் பிறந்தது. அவருடைய வலிமைக்கு நான் ஈடா? மஞ்சத்திலே நான் சாய்க்கப்பட்டேன். கூவிய என் வாயை, அவர் தமது வாயால் மூடி

விட்டார். என் கன்னங்கள் அவருடைய கோரப் பற்களுக்கு இரையாயின. என் இதழ் துடித்தது. என் உடல் பதறிற்று, என் உயிர் போய்விடும் போலாகிவிட்டது. மகளே என்று அழைத்து வந்த அந்த காதகன், அன்றிரவு என்னைத் தன் காமத்துக்கும் பலியாக்கிவிட்டான்! அழுது அழுது என் கண்கள் சிவந்துவிட்டன. அவனோ சிரித்துச் சிரித்து என்னைச் சித்திரவதை செய்தான். "தான் பயிரிட்ட செடி, மரமாகிக் கனி தந்தால் அதனைச் சுவைக்க வேறு யாருக்கு உரிமை உண்டு?" என்று கேட்டான். என் நிலைமையை நினைத்தாலே நடுக்கம் பிறந்தது. வெளியே சென்று யாரிடம் முறையிடுவேன்? எவரையும், என் மொழியைக் கேளாவண்ணம் அவன் தடுத்துவிடுவான்! என் பிரிய பதியாக யாரைக் கொள்ளவேண்டுமென்று நான் நிச்சயித்திருந்தேனோ, அவர் முகத்தில் எங்ஙனம் விழிப்பேன் என்று திகைத்தேன். பகலிலே தவமணி! மாலையிலே உமது மூத்த மகனின் காதற்கனி! இரவிலே, அந்த காமக் கள்ளனின் போகமாது! இந் நிலையிலே எத்தனை காலம் நான் தள்ள முடியும். என்னால் சகிக்க முடியவில்லை. எனவே இவரிடம் உண்மையைக் கூறினேன். இவன் தலை கீழே உருண்டது, என் நெஞ்சிலே இருந்து வந்த பாரம் குறைந்தது" என்று தவமணி என்ற அந்தத் தையல் தன் வரலாற்றினை உரைத்தாள். நான் திக்பிரமை அடைந்தது போலவே, என் தந்தையும் திக்பிரமை அடைந்தார். "தவவேடமிட்டுத் தகாதசெயல் புரிந்துவந்த இந்தத் தூர்த்தன் ஒழிந்தது முறையே! மகனையே மஞ்சத்துக்கு இழுத்த மாபாவி ஒழிந்தது சரியே! இவன் தலை கீழே உருண்டது கண்டு மருண்டு என் மகனையேயன்றோ ஏதேதோ செய்திட எண்ணினேன்." என்று மன்னர் கூறினார். சரி ஒருவாறு தொல்லை தீர்ந்தது என்று நான் நினைத்தேன். ஆனால் நடந்தது விபரீதமாயிற்று. என் அண்ணன் மணம் புரிந்துகொள்ளத் தாங்கள் அனுமதி தரவேண்டும்" என்று வேண்டினார். அச்சொல் கேட்ட என் தந்தை தீ மிதித்தவர்போல் குதித்தார்.

"பாண்டியநாட்டுப் பார்த்திபனாக வரவேண்டியவனடா நீ படுமோசச் செயலைப் புரியலாகாது"

"படுமோசம் நான் புரியவில்லை. இப்பாவையை மணக்க விரும்புகிறேன். சிங்காதனம், இச்சிங்காரியுடன் நான் வீற்றிருக்க இடமளித்தால் சரி, இல்லையேல் அது வேண்டாம் எனக்கு"

"தவமணி யோகி வேடந்தாங்கியிருந்த சாமிக்குப்போகப் பொருளாக இருந்தாள், அவளை நீ உன் அன்புக்கு இருப்பிடமாக்கினாய். ஆனால் உன் குடும்ப விளக்காக அவள் இருக்க முடியுமா?"

"அன்பு இல்லாதவிடத்து, மணம் இல்லை"

"நாடாளப் பிறந்தவன் நீ. வெறும் ஏட்டாளனாக இராதே தவமணி இங்கு தங்கட்டும். அவளுடைய இல்லம் உனக்கு இன்ப மாளிகையாகயிருக்கட்டும்; ஆனால், அரச மாளிகைக்கு வேறு ஒருவள் இருந்தே தீரவேண்டும். அதுதான் முறை."

"தந்தையே! உமது வார்த்தையை மீறுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். அவள் ஓர் காமுகனின் சேட்டையால் சிதைந்தாள், அது அன்னவள் குற்றமல்ல. என்றைய தினம் நான் அவளை உண்மையாகக் காதலிக்கத் தொடங்கினேனோ, அன்றே நான் அவளை ஆஸ்ரமத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்திருக்கவேண்டும் தவமணியை நான் அங்கு விட்டதனால்தான் தகப்பனாக நடித்த அந்தத் தறுதலை தகாத செயல் புரிந்தான். அவனுக்குத் தண்டனை தந்தாய்விட்டது. இவள் செய்த குற்றமென்ன? ஏன் இவளை என்னிடமிருந்து பிரிக்க வேண்டும்?"

"நீ அரசனின் மகன், மூத்த புதல்வன்; இளைய அரசன் நாளை அரசாளவேண்டியவன். அது கவனமிருக்கட்டும்!"

"இவளோடு, பாண்டிய நாடு என்னை ஏற்றுக் கொண்டால் நானிங்கு இருப்பேன், இல்லையேல் அரசும் வேண்டேன்."

இந்த உறுதியான பேச்சைக் கேட்ட என் தந்தை கோபமேலிட்டு, "பாண்டிய நாடே பெரிது; உன் பிடிவாதமல்ல! என் ஆணையே பெரிது; உன் ஆசையல்ல. பல கோடி மக்களின் பாதுகாவலனாக இருக்கும் பணியே சிறந்தது; ஒரு பாவையுடன் புரண்டு கிடக்கும் போகமல்ல, அரசன் நீதியின் அடையாளம்; பொறுப்பின் சிகரம்; போகத்தின் தூதனல்ல காரியமும் வீரியமும் மிளிர அவன் விளங்கவேண்டும்; காதலுக்காகக் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கலாகாது. பாண்டிய நாட்டுப் பார்த்திபனின் மகன் இப்படி, பழுதுபட்ட ஓர் பாவைக்காகத் தனது பரம்பரைப் பண்பு, பாராளும் உரிமை, தந்தையின் வேண்டுகோள் எனும் இவற்றைத் தட்டத் துணிவது மடமை, கொடுமை இதை நான் அனுமதியேன். நாடு அனுமதிக்காது; வேண்டாம் பிடிவாதம். எப்படியோ இந்த மங்கைக்கும் உனக்கும் சம்பந்தம் உண்டாகிவிட்டது. அதற்காக வேண்டி, நீ மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு என்ன என்பதையும் அந்தத் தொண்டு புரிய எது தகுதியான முறை என்பதையும் மறவாதே. தந்தை தனயனிடம் தர்க்கிக்க வேண்டிய விஷயமுமல்ல இது நீ உனது நிலைமையை உணர்ந்து நட" என்று மன்னர் கூறினார்.

"தந்தையே, காதல் என்பது தர்க்கத்துக்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை. இது பற்றி அதிகம் பேசிடவோ எனக்கு மனம் இல்லை. ஒன்று மட்டும் உரைப்பேன். உத்தமோத்திமராகிய தாங்கள் அறியாததல்ல நான் கூறப்போவது அரும்பு மலர, முகூர்த்தம் குறிப்பாரில்லை, யார் எவ்வளவு முயன்றாலும் அரும்பை அவரிஷ்டத்துக்கு இணங்கவைத்து மலராகும்படிச் செய்யமுடியாது. பகலோனைக் கண்டதும், மலர்ந்திடும் பங்கஜத்தைப் பட்டத்தரசனுங்கூட சட்டமிட்டுத் தடுத்திட முடியாது. முடிவேந்தனானாலும், ஓர் மயிலை ஆடு என்று கட்டளையிட்டுத் தோகையை விரித்தாடச் செய்யவும் முடியாது. தானாகக் களிகொண்டு ஆடிடும் மயிலையும் "நிறுத்து உன் நடனத்தை" என்று கூறிட முடியாது. அதுபோலவே, தர்க்கமும், தடை உத்திரவும். தண்டனையும் நிந்தனையும், வம்பும் வல்லடியும் வாலிப உள்ளத்திலே மலரும் அந்தக் காதல் எனும் உணர்ச்சியைப் பறித்துவிட முடியாதல்லவா? தந்தாய்! தவமணியின், காவியே என்னைத் தடுக்க முடியவில்லை. ஆஸ்ரமமாயிற்றே அங்கு ஆத்மாவுக்கும் ஆண்டவனுக்கும் பரஸ்பரம் ஏற்பட வேண்டுமே ஒழிய, ஆணுக்கும் பெண்ணுக்கும், ஆசைங்

# சிந்தனைச் சிற்பியே நீடுநீர் வாழ்க!

(அமைச்சர் பாவலர் முத்துசாமி)

சிந்தனைச் சிற்பி சிற்றர சண்ணு!
அறுபத்து நான்காம் ஆண்டு விழாவில்
தலைமை தாங்கிடும் தமிழக முதல்வ!
கலைஞர் பெரும! கைகுவித் தேன்நான்
விழாப்புகழ் கொள்ளு வீரர்சிற் றரசே!
அவர்புகழ் சொல்ல அணிவகுத் திங்கே
மன்றம் அமைந்துள மாண்புறு அமைச்சர்காள்!
தோழமைக் கட்சியின் தோன்றல்காள்! வணக்கம்!
கலைஞர் தலைமையிற் கண்டிடும் விழாவை
அலைகடல் ஓரம் அமர்ந்துநம் அண்ணு
கண்டு மகிழும் காட்சிகொள் வணக்கம்!
அன்புறு நெஞ்சம் அரங்கி விருப்பதால்
சூழ்நிலை யாலே தொலைவில்நான் இருந்தும்
சிந்தனை சிற்பியின் திருவிழாக் காண்கிறேன்!
வந்தனை கூறி வாழ்த்துரைக் கின்றேன்
முதுபெரும் கிழவர் மூத்தநம் தலைவர்
எதுவரின் ஏற்கும் இதயம் படைத்தவர்
அஞ்சா நெஞ்சினர் அடலே றனையர்
வெஞ்சமர் கண்ட வீரத் தளபதி
'போர்வாள்' நாடகப் புரட்சி செய்தவர்
பகைவருக் கஞ்சாப் பாய்புலி வேங்கை
பகைவெல தன்னுயிர் பணயம் வைத்தவர்
தொகை தொகை யாகத் துன்பம் தொடரினும்
துஞ்சுத லில்லாத் தூய்மனத் தொண்டர்
தீங்கினைக் கண்டால் சீறும் நெஞ்சினர்
பாங்கினைப் புகழும் பால்போற் பண்பினர்
இளமைத் துடிப்பினை இன்றும் கொண்டவர்
உளத்தில் அமைதியும் உறுதியும் பெற்றவர்!
அஞ்சுதற் கஞ்சும் அறிவுளத் துறவி
அஞ்சாச் செயலில் அமர்க்கள வீரர்!
இழிசெயல் கண்டால் எரிக்கும் எரிமலை
புகழ்க்குரி யாரைப் போற்றிடும் தென்றல்!
இத்தகு பண்பின் மொத்த உருவமாய்
நத்திடும் மக்களின் உத்தமத் தலைவனாய்
விளங்கிடும தனமையின் மேன்மையைக் கண்டே
மாண்புறு முதல்வர் மக்களின் தலைவர்
கனித்தமிழ்க் கலைஞர் கருணா நிதியார்
மேலவைத் தலைவராய் விளக்கினை ஏற்றினர்!
சிந்தனைச் சிற்பி சிற்றர சவரை
நாட்டர சாட்சியின் நற்புகழ் மேலவைப்
பேரர சாட்சிப் பெரும்பொறுப் பீந்தார்!
உத்தமர் தமக்கு உரியநற் பணியிது
அப்பணி யேற்றே அருந்தமிழ் ஆட்சியின்
பெருமை உயர்த்திய பேரறி வாள!
சிந்தனைச் சிற்பியே! சிற்றர சண்ணு!
உம்மை வணங்கி உளங்களிக் கின்றேன்!
இன்றுபோல் என்றும் இன்பந் தேங்கிடச்
சுந்தரத் தமிழின் தொல்புகழ் போல
நின்று நிலைத்து நீடுநீர் வாழ்க!
பாடற் சுவைபோல் பல்வள முற்று
நாடு போற்ற நாளெலாம் வாழ்கென
பாடி உம்மைப் பரவுகின் றேனே!

கனம் உண்டாவது முறையா என்று தர்க்கிக்க என் மனம் இசையவில்லை. காரணம், காலம், விளைவு முதலிய எதனையும் பொருட்படுத்தாது திடீரெனக் கிளம்பும் ஜோதியன்றோ காதல்" என்று என் அண்ணன் கூறினர்.

"அது ஜோதியோ, அல்லவோ, எனக்குத் தெரியாது. இவள் இந்த மண்டலத்துக்கே பெருந் தீயானாள். தந்தைக்கும் மகனுக்கு மிடையே, சண்டை மூட்டுகிருள். பாண்டிய குடும்பத்தின் மணியை மாசாக்குகிருள். பாண்டிய நாட்டுக்கு ஓர் பழிச்சொல் ஏற்படச் செய்துவிட்டாள் வன்னஞ்சக் காரி! வளர்த்த தகப்பனின் காமக் கூத்துக்கு இட மளித்த வேசி!" என்று என் தந்தை தவமணி எனும் பெண்ணைக் கடிந்துரைத்தார். என் அண்ணன், அச்சொல் கேட்டு வெகுண்டு, "தந்தையே! அரச நீதியின்படியும், பாண்டிய பரம்பரை முறைப்படி யும், இவள், பட்டத்தரசியாகும் உரிமை இழந்தவ ளாகலாமே தவிர, பழிச்சொல் கேட்டுத் தீரவேண்டு மென்று நியதி இல்லை. அவளை நான் மனமார என் பிரிய நாயகியாகக் கொண்டுவிட்டேன். எனவே இனி யார் அவளைப்பற்றி இழிவாகப் பேசத் துணிந் தாலும், நான் சகியேன்" என்று கூறினர்.

பிறகு அங்கு நடைபெற்ற சோகரசமான சம்ப வங்களை நான் சுருக்கமாகவே கூறுகிறேன். "நடனு! என் தந்தை கெஞ்சியது மட்டுமல்ல, தவமணியும் எவ்வளவோ இதமாக என் அண்ணனுக்குப் புத்தி சொன்னாள். நானும் என்னால் கூடுமான மட்டும் அவரைத் திருப்ப முயன்றேன். அவர் பிடிவாதம் குறைவதாகத் தெரியவில்லை. பிறகு என் தந்தை ஓர் பயங்கரமான முடிவுக்கு வந்தார். தலைமீது கரங்களால் மோதிக்கொண்டார், தட தடவென ஓடினர், மடமடவென ஏதேதோ பேசினர் பிறகு "கடைசி முறை என் சொல்லைக்கேள்" என்று கூறினர். என் அண்ணன். முடியாது என்பதைத் தெரிவிக்கத் தன் தலையை அசைத்தார் கெம்பீரமாக. அந்தக் கெம்பீரம், என்னைத் தூக்கிவாரிப்போட்டது. ஒரு அரசனின் கோபம், ஒரு தந்தையின் ஆத்திரம். அதுமட்டுமா அரசபோகம் பறிமுதலாகும் என்ற நிலை எதுவும் துச்சமெனக் கருதிய இவருடைய துணிவுக்குக் காரணம், ஒரு துடி இடையாள்!



"போராடுவோம்; நாடு முழுவதிலும் போராடுவோம் எழுத்தறியாமையை எதிர்த்துப்போராடுவோம். தற்குறித் தன்மையைத் தகர்க்கப் போராடுவோம். பாகிஸ்தான் படையெடுப்பின்போது, நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்ததைப்போல், கல்லாமையை இல்லாமல் ஆக்கும் போரிலும் கிளர்ந்தெழுந்து போராடுவோம்". இது புது வகையான போர்ப்பரணி. இப்போர்ப்பரணி கேட்டோம், புது தில்லியில். மே திங்கள் நான்காம் நாள், அங்கு நடந்த முதியோர் கல்வி தேசிய வாரியத்தின் முதற்கூட்டத்தில் இம்முழக்கம் கேட்டது. முழக்கத்தோடு முடிந்துவிடுமா? முதியோர் எழுத்தறிவுத் திட்டம் இயக்கமாக வளருமா? இது காலத்தின் கையிலிருக்கிறது.

இதற்கு முன்னரும், முதியோர் கல்வியின் தேவையைப்பற்றி, எப்பொழுதாவது ஒருமுறை, யாராகிலும் ஒரு பெரியவர், நினைவுபடுத்துவதைக் கேட்டதுண்டு. ஆண்டுக்கொருமுறை, இருமுறை எழும் அக்குரல், காற்றிலே கலந்து விண்ணிலே மறைந்துவிடும். பேச்சின் அருமையைப்பற்றி, எடை போட்டு, பொழுது போக்க மட்டுமே, அவ்வறிவுரைகள் பயன்பட்டன. அப்போக்கிலே, மாற்றம் வருமா? வரும்; வரவேண்டும்; வரச் செய்யவேண்டும். அதற்கான சாத்தியக்கூறுகள் என்ன?

முதியோர் கல்வி பேசித் தீர்க்கவேண்டிய ஒன்றல்ல; முயன்று செய்து முடிக்கவேண்டிய செயல். முனைப்பாக செய்து முடிக்கவேண்டிய திட்டம், பரவலாக செய்து முடிக்கவேண்டிய பணி. இனியும் தள்ளிப் போட முடியாத பணி. நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமுதாய சீரமைப்பிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆணி வேரான ஒன்று, முதியோர் கல்வித் திட்டம், என்பதை இந்திய கல்வி அமைச்சகம் உணர்ந்திருக்கிறது. அவ்வுணர்ச்சியின் உந்துதல் தேசிய முதியோர் கல்வி வாரியமாக உருப்பெற்றுள்ளது. முதியோர் கல்விக்கென்று, வலியுள்ள அமைப்பொன்று தோன்றியது, இதுவே முதன் முறை. செய்து முடிக்கத் துடிக்கும் கல்வி அமைச்சர், டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களது உறுதியின் உணர்ச்சியின் அடையாளம் இந்த அமைப்பு. அவர்களுக்கு நம் நன்றியும் பாராட்டும் துணை வேண்டாமா? நன்றாக வேண்டும். ஒவ்வொரு மாநில, யூனியன் பகுதி, கல்வி அமைச்சரும் தேசிய முதியோர் கல்வி வாரியத்தில் உறுப்பினர். தொழிலதிபர்கள் பிரதிநிதியும் உறுப்பினர். தொழிலாளர் பிரதிநிதியும் பங்கு பெறுகிறார். கல்வியாளர் சிலரும், பல்கலைக் கழகங்களின் பிரதிநிதிகளில் சிலரும் இடம் பெற்றுள்ளனர் அறுபது 'பெருந்தலை'களின் துணையோடு தொடங்குகிறது வாரியம். அது ஆற்ற வேண்டிய பணி எத்தகையது? எந்த அளவினது?

முதியோர் கல்வியை வளர்ப்பது அதன் பணி முதியோர் கல்வி என்று மேனாடுகளில் கூறும்போது, பொருள் ஒன்று. நம் நாட்டில் அச்சொற்றொடருக்குப் பொருள் வேறு. மேனாடுகளில், 'முதியோர் கல்வி' என்பது தொடர் கல்வியைக் குறிக்கும். அதாவது இளமைப் பருவத்தில், ஓரளவு கல்வி கற்றுவிட்டு நின்றவர்கள், பின்னர், முதுமைப் பருவத்தில் அத்துறையிலோ, புதுத்துறைகளிலோ, தொடர் கல்வி பெறுவதையே அது பெரும்பாலும் குறிக்கும். அந்நாடுகளில், எழுத்தறிவு பெற முயல்வதை அது குறிப்பதில்லை.



நம் நாட்டிலோ முதியோர் கல்வி என்றதும் எழுத்தறிவு இயக்கமே, நம் கண் முன் தோன்றும், காரணம்—நம் மக்களின் நிலை அப்படி. நம் மக்களில் நூற்றுக்கு அறுபத்தேழு பேருக்கு, தங்கள் பெயரை எழுதக்கூடத் தெரியாது. மூவரில் இருவர் தற்குறிகள். அவர்களுடைய கல்விக் கண்ணைத் திறந்துவிட வேண்டும், மூவரில் இருவர் என்பது முதியோர் எழுத்தறியாமையின் பெரும் அளவைக் காட்டாது. இந்தியாவில் முப்பத்தாறு கோடி பேருக்கு எழுத்தறிவு ஊட்டவேண்டும். 'அப்பாடி; இத்தனை பேருக்கா? எப்படி முடியும்', என்று மலைத்து சோர்ந்துவிட வேண்டாம்.

இந்த முப்பத்தாறு கோடி பேர்களில் பெரும்பாலோர் உழைக்கும் வயதினர். அதாவது 15 முதல் 45 வரை வயதுடையவர்கள். அவர்கள் பயிரிடுவோர், தொழில் புரிவோர், படிக்கத் தெரியாத பயிர்த் தொழிலாளி, எந்த விதையை விதைப்பது? எந்த வேலையை எப்படிச் செய்வது? எப்போது செய்வது? எந்த உரத்தை எந்த நேரத்தில் எந்த அளவு போடுவது, என்பதை படித்துத் தெரிந்து கொள்ளமுடியாது. ஆகவே அண்டையில் உள்ளவர்களைக் கேட்டே வாழ வேண்டும். இது அவருக்கும் இடையூறு. மற்றவர்க்கும் தொல்லை. கேட்டுச் செயல்படுவதைவிட படித்துச் செயல்படுவது நல்லது. உழவர்கள் ஒவ்வொருவரும் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டால், வேளாண்மைத் துறையும் உர உற்பத்தியாளர்களும் அச்சிட்டு வழங்கும் குறிப்புகளைப் படித்து தாமே செம்மையாகச் செயல்பட முடியும். அப்போது விளைச்சல் பெருகும். பிற தொழிலாளர் செய்திறனும், கல்வியினால் வளரும். நாட்டின் தொழில் திறனை வளர்க்கவும் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் இன்றியமையாதது கல்வி.

முப்பத்தாறு கோடி பேருக்கும் எழுத்தறிவு கொடுத்துவிட முடியும். எப்படி? படித்த ஒவ்வொருவரும் படிக்காத இரண்டொருவருக்காவது எழுத்தறிவு

# போர் முழக்கம்

ழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு—

ஊட்ட உறுதி கொள்ளவேண்டும். படித்து முடித்தவர்கள் மட்டுமல்ல. உயர்நிலைப்பள்ளிகளிலும் பலவகைக் கல்லூரிகளிலும் மாணவர்களாக உள்ளவர்களும் எழுத்தறிவு இயக்கத்தில் குதிக்கவேண்டும். உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றில் உள்ள மாணவர்கள் இரண்டு கோடியாவது இருக்கலாம். அவற்றில் பாதிபேரையாவது முதியோர் எழுத்தறிவு இயக்கத்தில் ஈடுபடுத்துவது முடியாத செயலல்ல. மாணவர்கள் அல்லாதவர்களிலே, ஓய்வு பெற்றவர்கள், அலுவல் பார்ப்பவர்கள், ஆசிரியர்கள், படித்த பாட்டாளிகள், படித்த குடியானவர்கள் ஆகியோரிலிருந்து இரண்டு கோடி தொண்டர்களையாவது திரட்ட வேண்டும். முயன்றால், முடியக் கூடியதே இதுவும், இவர்களில் எவரும் முழு நேரப் பணி செய்யத் தேவையில்லை, இரண்டொரு மணி நேரத்தை எழுத்தறிவு இயக்கத்திற்கு ஒதுக்கினால் போதும். சாதாரணமாக 80 மணி நேரத்தில் எழுதப் படிக்க; கணக்குப் போட கற்றுக் கொடுத்து விடலாம். அதாவது, நான்கு மாதங்களில், பகுதி நேரப் படிப்பின் மூலம் முதியோருக்கு எழுத்தறிவு கற்றுக் கொடுத்து விடலாம். அதாவது, ஆண்டிற்கு, மூன்று வகுப்புகளுக்கு எழுத்தறிவு கொடுக்கலாம். வகுப்பிற்கு இருவர் என்றால்கூட, ஒரு தொண்டர் ஓராண்டில் ஆறு பேருக்கு எழுத்தறிவு ஊட்டலாம். மூன்று கோடி தொண்டர் ஓராண்டில் பதினெட்டு கோடி பேருக்கு எழுத்தறிவு கொடுக்க முடியும், ஈராண்டில் முப்பத்தாறு கோடி பேரையும் எழுத்தறிவுடையவர்களாக்கலாம்? மூன்று கோடி பேரை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்த காலதாமதமாகும். சூடு பிடிக்கவும் காலதாமதம் ஆகலாம், மெய்யாகவே, பரவலான, நாடு முழுவதற்குமான முதியோர் கல்வி இயக்கத்தைத் தொடங்கினால், ஒரைந்தாண்டு காலத்தில், எல்லோரும் எழுத்தறிவு பெற்று விடுவார்கள்.

தமிழ் நாட்டின் நிலையைக் கவனிப்போம். தமிழ் நாட்டில் நூற்றுக்கு நாற்பது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். ஆகவே இரண்டு கோடி பேர் போல் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்களில் ஐந்து வயதிற்குட்பட்ட சிசுக்களையும் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களையும் படிக்கும் வயதுடைய சிறுவர் சிறுமிகளையும் விட்டு விடுவோம். ஒரு கோடி முதியவர்க்கு எழுத்தறிவு கொடுத்துவிட்டால், தமிழ் நாட்டில் 'எல்லோர்க்கும் எழுத்தறிவு' என்ற நிலை எட்டிவிடும்,

தமிழ் நாட்டில் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகள் ஆறு இலட்சம், கல்லூரி மாணவர்கள் இரண்டு இலட்சம், பல நிலை ஆசிரியர்கள் இரண்டு இலட்சம், பலவித படித்த அலுவலர்கள் ஐந்து இலட்சம், ஓய்வு பெற்றவர்களில் படித்தவர்கள், வீட்டோடு இருக்கும் படிப்பாளிகள் ஐந்து இலட்சம். ஆகமொத்தம் இருபது இலட்சம். இவர்களில் பாதிப் பேராவது பாதி நேரத் தொண்டர்களாக — எழுத்தறிவுப் படைத் தொண்டர்களாக—முன் வரவேண்டும். பத்து இலட்சம் பேர் முன்வந்தால் ஓராண்டில் ஆறுபது இலட்சம் பேருக்கு எழுத்தறிவு கொடுத்துவிட முடியும். இரண்டாண்டில் எல்லோரும் எழுத்தறிவு பெற்றுவிடுவார்கள் இது உச்ச ஆசை. இவ்வளவு முடியாவிட்டாலும் நான்கு இலட்சம் தொண்டர்களையாவது திரட்டுவது முடியாத ஒன்றல்ல. ஒவ்வொரு தொண்டரும் ஆண்டிற்கு ஐந்து முதியோர்க்குக் கற்றுக் கொடுத்துவிட்டால் இருபது இலட்சம் பேர் எழுத்தறிவுடையவர்களாகிவிடுவார். ஐந்தாண்டில் ஒருகோடி மக்களும் எழுத்தறிவு பெற்றுவிடுவார்கள். ஐந்தாண்டிலாவது எல்லோர்க்கும் எழுத்தறிவு நிலைமை எட்டவேண்டாமா?

எழுத்தறிவு எத்தனை நாளைக்கு நிற்கும்? தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் நிலையாக நிற்பது மட்டுமல்ல; வளரும் காரணம்? தெருவிற்குத் தெரு இன்று நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் கிடைக்கின்றன. சிற்றூர் தெருக்களிலும் கிடைக்கின்றன எழுத்தறிவு, மேலும் வளர்வதற்கு அவை நீங்காத் துணையாகின்றன.

இதற்கு செலவில்லையா? உண்டு. நான்கு மாதங்களுக்கு விளக்குச் செலவு. இது நான்கு மாதங்களுக்கு ரூபாய் 25க்கு மேலாகாது. முதியோர் ஒவ்வொருவருக்கும் பாட நூல், எழுதுகோல், நோட் புத்தகம் வாங்கித் தரவேண்டும். ஆளுக்கு ரூ. 1-50 தேவை. ஒரு வாரப் பயிற்சியாவது வேண்டும். அதற்கு ஒரு இருபத்தைந்து ரூபாய் தேவைப்படலாம் தொண்டர்களுக்குச் சன்மானம். இவற்றிற்கெல்லாம் சிறிதும் பெரிதுமாக நன்கொடை கொடுக்கக்கூடிய நல்லவர்கள் உள்ளனர். நிதி மிகுந்தவர் பொற்குவை தருவர். நிதி குறைந்தவர் காசுகள் தருவர். நாம் உழைப்பைத் தருவோம். நேரத்தைத் தருவோம்.

தொண்டர்களே! புறப்படுங்கள். கல்லாமையை அழித்தொழிக்கப் புறப்படுங்கள். எழுத்தறிவுப் பணி செய்யப் புறப்படுங்கள். அவர் வர இவர் சேரக் காத்திருக்காதீர்கள். முனைந்து விடுங்கள். எழுத்தறிவு ஊட்ட பக்கத்திலுள்ள முதியவருக்குக் கற்பிக்க முனைந்து விடுங்கள்.

*

# நாகரிகம் படும் பாடு!

மேனாட்டுப் பெண்கள் ஆடை அணியும் முறையை இந்தியப் பெண்களின் ஆடையணி முறையோடு ஒப்பிட்டுப்பார்த்து மேனாட்டினரின் ஆடைகள் ஆபாசமாகவும் அரை நிர்வாணமாகவும் இருப்பதாகப் பழித்துக் கூறப்பட்ட காலம் ஒன்றிருந்தது!

இப்போது காலம் மாறிவிட்டிருக்கிறது. நவ நாகரிகத்தில் மூழ்கிய இந்தியப் பெண்கள், இந்தியாவிலும் அவர்கள் சென்று வழும் மேலை நாடுகளிலும் ஆடை அணியும் முறைகளைக் கண்டு, ஐரோப்பியரும் அமெரிக்கரும்கூட அதிர்ச்சியும் வியப்பும் அடைகின்றனர்.

இவ்வாறாக "இந்தியக் கலாசார"த்தை உலகெங்கும் பரப்பும் பணியில் நமது இந்தியத் தூதராலயங்களுக்குப் பெரும் பங்கு உண்டு!

சிறு பெண் குழந்தைகள் பிறந்த மேனியாக நின்றால்கூட "சிலை போல வெட்கமில்லாமல் நிற்கிறாளே!" என்று பெரியவர்கள் கடிந்து கொள்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

அதே சிலைகளை நினைவூட்டும் வகையில், ஆடை என்ற பெயரில் மெல்லிய துணிகளை அணிந்து கொண்டு வயது வந்த பெண்கள் நடமாடுவது இன்று நம் நாட்டில் சர்வ சாதாரணமான காட்சியாகி விட்டது. சினிமாப் படங்கள் இந்த நிலைக்குப் பெரிதும் 'உதவி'யிருக்கின்றன.

இதைவிட மேனாட்டுப் பெண்கள் அணியும் உடைகள் எவ்வளவோ உயர்ந்தவை என்று சொல்லலாம். தாவணி, புடைவை முந்தானை போன்ற மேலாடை ஒன்று இல்லாத குறையைத் தவிர மற்றபடி அவர்களின் "கவுன்"கள் கனத்த துணிகளாலே ஆக்கப்பெற்றிருக்கும், கண்ணியமான பெண்களின் ஆடை எதுவும் அடிவயிறு, இடுப்பு முதலிய பாகங்களை மறைத்துக் கொண்டுதான் இருக்கும்.

அதற்கு மாறாக நம் நாட்டில் உயர்ந்த செல்வாக்குள்ள, கல்வி கற்ற பெண்கள் புடைவை கட்டும்போது இடுப்புக்குக் கீழ் எவ்வளவு இறக்கிக் கட்டமுடியுமோ அப்படிக் கட்டுவதையும் மேலே மார்பு வரை எவ்வளவு இடைவெளிவிட இயலுமோ அவ்வளவு விட்டு வைப்பதையுமே நாகரிக உயர்வின் அடையாளமாகக் கருதுகின்றனர்.

இந்த அலங்கோலப் போக்கின் காரணங்களையும் அதன் விளைவாக மேலை நாட்டினரின் உள்ளங்களில் இந்திய நாகரிகம் பண்பாடு பற்றித் தோன்றியுள்ள தவறான கருத்துக்களையும் விளக்கி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளிதழில் திரு. சிதன்ஷு தாஸ் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இந்தியாவில் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு கட்டுரை எழுதும் "கட்டுப் பெட்டி" எழுத்தாளர் அல்ல அவர். "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையின் இங்கிலாந்து தேசப் பிரதிநிதியும், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சுற்றுப் பணி புரியும் நிருபரும் ஆவார். லண்டன் மாநகர சூழ்நிலையில் அமர்ந்து அக்கட்டுரையை அவர் எழுதியனுப்பியிருக்கிறார்.

'வெளிநாடுகளுக்குச் செல்லும் ஒவ்வொரு இந்தியரும் நம் நாட்டின் நல்லெண்ணத் தூதராவர். நம் நாட்டுக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அங்கு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும்!" என்று காலஞ்சென்ற பண்டித நேரு முதல் ஒவ்வொரு தலைவரும் கூறி வந்துள்ளார்கள்; இன்றும் கூறிவருகிறார்கள்.

அப்படி வெளிநாடுகளில் போயிருந்து அவர்கள் பிரதிபலிக்கும் கலாசாரம் முஸ்லிம்களால் "மாசு படுத்தப்பட்ட" கலாசாரமாக இல்லாமல் பூர்வீக இந்தியக் கலாசாரமாக இருக்கவேண்டும் என்பது அவர்களுள் பெரும்பாலோரின் கருத்து. அதனாலேயே தாஜ்மஹால் போன்ற கலைச் சின்னங்களுக்கு அவர்கள் தகுந்த மதிப்பளிப்பதில்லை. அதனால்தான் வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் அனைத்திலும் இப்போதெல்லாம் இந்தியக் கோயில்களில் காணப்படும் பெண் சிலைகளின் பிரதி பிம்பத்தை வடித்தெடுத்து நுழைவாயிலில் இருந்தே காட்சி பெற வைத்துள்ளார்கள். அவையும் மேலை நாடுகளில் வாழும் இந்தியப் பெண்களின் தோற்றமும் ஒன்று சேர்ந்து நம் நாட்டு நாகரிகமே "ஆடைக் குறைப்பு' நாகரிகம்தான் என்னும் தவறான எண்ணத்தை அவர்களின் மனங்களிலே தோற்றுவித்து வருகின்றன என்னும் கருத்துப்பட திரு. சிதன்ஷு தாஸ் எழுதியுள்ளார்.

மேலும் கோனாரக், கஜுராஹோ போன்ற பல பிரசித்தமான கோயில்களிலுள்ள சிலைகள் ஆண்—பெண் உறவை எல்லாக் கோணங்களிலிருந்தும் காட்டுகின்றன. அவற்றைப் போன்ற சிலைகளை நம் தூதரகங்கள் ஆங்காங்கே இதுவரை வடித்து நிறுத்தவில்லை என்றாலும் அக் "கலைக் கருவூலங்கள்" புகைப் படங்களின் வடிவில் காட்சிக்கு வைக்கப்பட்டு இந்தியாவின் பண்டைய கலாசாரத்தைப் பறை சாற்றிக்கொண்டிருக்கின்றன. அத்தோடு "காம சூத்திரம்" இயற்றிய வாத்ஸ்யாயனரின் நாடு இந்தியா என்ற புகழும் சேர்ந்து, காமக்கலைகளின் பிறப்பிடமும் கேந்திரமும் பாரதத் திருநாடே என்று மேனாட்டினரை நம்பச் செய்கிறதாம். அப்படித்தான் அவர்கள் நினைக்கிறார்கள் என்பதை இங்கு வரும் "ஹிப்பி"களின் நடையுடை பாவனைகளிலிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளலாம். "ஹிப்பி"ப் பெண்கள் சிலர் அஜந்தாக்குகை ஓவியங்களிலுள்ள பெண்களைப் போல மார்க்கச்சை மட்டும் கட்டிக் கொண்டு உலவுவதை சென்னை போன்ற நகரங்களில் காணலாம்.

இந்தியப் பெண்களில் பலர் உடம்பின் முதுகுப் புறத்திலும் முன் புறத்திலும் பெரும்பகுதி தெரியும்படி "ரவிக்கை" அணிந்து, வெங்காயச் சருகுத் துணியால் மறைப்பது போன்ற பாவனையில் சேலை அணிந்துகொண்டு லண்டன், பாரிஸ், நியூயார்க் போன்ற நகரங்களில் "ஷாப்பிங்" போகும்போது அவர்களைப் புதிதாகப் பார்க்கும் அந்நாட்டுப் பெண்களும், ஆண்களும்கூட, "இது என்ன வெட்கங்கெட்டதனம்?" என்று தமக்குள் பேசிக்கொள்கிறார்கள் என்று திரு. தாஸ் எழுதுவதைப் படிக்கும்போது, இந்தியக் கலாசாரமும் பண்பாடும் வெளிநாடுகளில் இவ்வளவு கேவலமாக மதிக்கப்படும்படியாகி விட்டதே என்று நமக்கு வேதனை ஏற்படுகிறது. ஒழுக்க உணர்வுகளுக்கு உரிய இடம் அளிக்காததும், கண்ணியமான தோற்றம் எது என்பது குறித்து தவறான கருத்துக்கொண்டு அதை, முன்மாதிரியாக, வாழ்க்கையின் முன்னணியிலுள்ளவர்கள் செயலுருவில் காட்டுவதுமே நாட்டில் இன்று பொதுவாக நிலவும் ஒழுக்கச் சிதைவுகளுக்குக் காரணம் என்று கூறும் சிந்தனையாளர்கள் சிலரேனும் நம் நாட்டில் இல்லாமலில்லை. டில்லி போன்ற தலைநகரங்களிலும் வேறு பல பெரிய நகரங்களிலும் இளம் பெண்கள் நாள்தோறும் இளைஞர்களால் பலவந்தமாக கவர்ந்து செல்லப்படுவதற்குக் காரணம், அப்பெண்கள் அவ்வாறு கவர்ந்திழுக்கும் வகையில் அரைகுறை ஆடையணிந்து திரிவதே என்று கூறப்படுகிறது.

— முஸ்லிம் முரசு" (கண்டதும் கேட்டதும் சில பகுதிகள்.)

# இடுகாடே!

இறந்துவிட்ட உயிரனைத்தும் உன்னுள் கொண்ட
இடுகாடே யானுன்னை விரும்புகின்றேன்;
மறந்துசற்றே துன்பமெல்லாம், ஆரவார
வையத்தை விட்டொதுங்கி இருந்திடற்குச்
சிறந்தஇடம் உனையல்லால் வேறும் உண்டோ?
சீழ்பிடித்த சமுதாய உறவொதுக்கி
நிறைந்திடவே உன்னகத்தே விழைந்தேன்; என்னுள்
நிறைந்துவிட்ட எண்ணமெல்லாம் சொல்வேன் முன்னம்!

கோத்திரங்கள் குலவழக்க வகைகள் பேணிக்
குறுவாழ்வில் பலவகையாய்ப் பேதம் கூறித்
தீத்திறம்செய் மாந்தரிடைப் போலி வாழ்க்கைத்
திறமறியேன்; சூதுள்ளம் கொண்டே இந்நாள்
பூத்திருக்கும் புதுக்கொள்கை ஏற்க வொப்பாப்
புலவர்கள் சாத்திரத்தின் சார்பாய் நின்றே
நாத்திறத்தால் தம்வழியைச் சரியென்பார்; இந்
நானிலத்தின் காவலர்யாம் என்றும் சொல்வார்!

வானத்தை, வெங்கதிரை, வெண்ணிலாவை
வையத்தைப் படைத்தபின்னர் இறைவன் எங்கோ
மோனத்தில் ஆழ்ந்துவிட்டான்; குழவி பேசும்
மொழிமறுத்த தாய்நிகர்த்தான்; என்னே உள்ளம்!
ஏனத்தின் நீரோடு கலவா நெய்யாய்
யானிங்கே வாழ்ந்துநின்றேன்; உள்ளத்துள்ள
மானத்தை விற்றுயர்ந்த மாந்தர் கூட்டம்;
மையமாய் இங்குள்ளதெல்லாம் பணமாம்; பாரேன்!

பல்வேறு வகையினரைக் கொண்டு நீயும்
பாறையைப்போல் உணர்விலாப் பிண்டமானாய்!
"வல்லூறு போல்வாழ்ந்த உளத்தினர்; எவ்
வகையிலேனும் வாழவேண்டும் என்றிருந்து
நல்மனமும் கெட்டழிந்தோர், புந்திக் காக
நாடோறும் கடிதுழைத்தோர்" என்றோரெல்லாம்
நல்லடக்கம் உன்ற்கொண்டார்; அப்பேற்றையான்
நாடிவந்தேன்; தவறோ என்முடிவும்? சொல்வாய்!

ஆனால் நீயோ,

போ! தம்பி! என்கின்றாய்! சொல்வேன் கேளாய்!
பொத்தலான உள்ளத்தை ஒட்டுப் போட்டு
சேதங்கள் வைத்துவிட்ட வடுவைப் போக்கிச்
சிறப்பாக்க—என் வாழ்வை—முயல்கின்றாயோ?
வாதமல்ல! வெறுப்புமல்ல! வாழ்விற்கண்ட
வையத்தின் மனப்போக்கைச் சாடுகின்றேன்;
சாதலையான் விரும்புகின்றேன்; வையத்தில்நான
சரிந்துவிட்ட மலைமுகடு; அழிந்த மாலை!

ஆதலால்,

மலர்த்தோட்டப்பசுமையைவெறுக்கின்றேன்யான்;
மாறாக, கல்லறைகள் நிறைந்த உனை,
பலர்தேகம் மறைத்துவைத் திலங்கும் அந்தப்
பாழ்வெளியை நிலவொளியில் காணும்போதே
புலர்ந்ததெனக் கும்விடிவு காலம் எனறே
பூரிப்பெய் துகின்றேன்; இஃதோர் நன்னாளே!
மலரிழந்த தண்டானேன்; வாட்டம் கண்டேன்;
வாழ்த்தியெனை ஏற்றுக்கொள்! இடுகாடே நீ!

— தேசிலவன்'



என். சீனுவாசன், விருத்தாசலம்.

நீங்கள் ஒரு நீதிபதியாக இருந்து, நக்சல் பாரி தலைவன் ஒருவனுக்குத் தண்டனையளிக்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப் பட்டால், உங்கள் தீர்ப்பு எப்படிப் பட்டதா யிருக்கும்.

நக்சல் பாரி தலைவனாக இருந்தாலும் சரி, நாட்டின் பொது அமைதிக்கு வன்முறைகளின் மூலம் கேடுண்டாக்க நினைக்கும் வேறு எவராயிருந்தாலும் சரி, அவர்கள் நாவைத் துண்டித்து, இரு கைகளிலுமுள்ள விரல்களையும் வெட்டிவிட வேண்டும் என்றுதான் கூறுவேன் — சட்டம் அனுமதிக்குமானால்! என் இதயம் இரும்பாயிருக்குமானால்!!

ஆற்றலரசு, சேலம்.

அன்பினை உடைக்கும் ஒரு ஆயுதம் இருக்கிறதா?

அறியாமை கொண்டு இந்த அகிலத்தையே உடைத்துவிட முடியும் என்கிறபோது, அதனால் அன்பை மட்டும் அழிக்க முடியாமலா போய்விடும்!

தேவிதாசன், சிவகெங்கை.

ஊழையும் வெல்ல முடியும் என்று ஒரு இடத்திலும், ஊழே வெல்லும் என்று ஒரு இடத்திலும் வள்ளுவர் கூறுகிறாரே, இது முரண்பாடில்லையா?

ஊழே வெல்லும் என்ற எண்ணத்தோடு மட்டும் இருந்துவிட்டால், நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற முடியாது; ஊழையும் வெல்லலாம் என்ற எண்ணம் இதயத்தில் நுழையும்போது, பல சந்தர்ப்பங்களில் வெற்றி காணவும் முடியும். எந்த சூழ்நிலையில் எதனை வலியுறுத்த வேண்டுமோ, அந்தந்த சூழ்நிலைக் கேற்ப வள்ளுவம் ஒரு கருத்தை வலியுறுத்துகிறது. இது முரண்பாடு ஆகாது. ஆனால் சிலப்பதிகாரம்போல, ஊழே தலையாயது; அதை வெல்லல் அரிது என்று கூறவில்லையே குறள், மகிழ்ச்சியடைய வேண்டாமா?

எம். ஜி. ஆர். தாசன், சென்னை.

காமராசர், எதிலாவது வெற்றி கண்டிருக்கிறாரா?

இதைப் பற்றி இப்போது அவரே, அவரது மனதிடம் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்!

கே. ராசாராமன். கோயில்பட்டி.

"முடத் தெல்கு" என்று குறிப்பிடுவது எதனை?

# ?! வினா-விடை

நம் வீட்டுத் தோட்டத்தில் வேர் விட்டு அடுத்த வீட்டுக்காரருக்குப் பலன்களைத் தந்துகொண்டிருக்கின்றனவே, அவையெல்லாம் அந்தப் பெயருக்குரியன தான்!

து. ரகுபதி. சேலம்.

மனிதன் எதிலேனும் 'முழுமை' பெற்றவனாக இருக்கிறானா?

இல்லாமலென்ன! பேராசைப் படுவதிலேயும் அடுத்தவனைக் கண்டுப் பொறாமைப்படுவதிலேயும் பரிபூரணமுடையவனாக இருக்கிறானே, தெரியவில்லையா!

மு. புகழேந்தி, குரிச்சிமலை.

"கவிதை" என்பது பகுபதமா? பகாபதமா?

எப்படிவேண்டுமானாலும்பிரித்துக் காட்டலாம்! கவி தை என்றும் பகுக்கலாம், க விதை என்றும் பகுக்கலாம், கவி தைக்கப்படுவதும், கவி விதைக்கப்படுவதும் ஒன்றுதான்! தைப்பது அழகாக அமைய வேண்டும், விதைப்பது ஒழுங்காக விளைய வேண்டும். கவிதை யென்று மொத்தமாக பகுக்காமலும் பொருள் கொள்ளலாம்! இந்த ஆராய்ச்சியைவிட, கவிதைகளை, கவிதைகளாய் இருக்குமாறு படைப்பதிலே கவனம் செலுத்துவது நற்பயன் நல்குமே!

க. மருதவாணன். காரைக்கால்.

ஆற்றல் மிக்கவர்கள் அனைவராலுமே, புகழ்பெற முடிவதில்லையே ஏன்?

ஒருவருக்கு எவ்வளவு ஆற்றலிருந்தாலும், அது மட்டுமே, புகழ் பெறப் போதுமான தகுதியாயிருப்பதில்லை வாய்ப்புக்களும் கூடவே இருக்கவேண்டும்! இந்திரனே, சந்திரனே என்று போற்றிப்பாடுபவர்களையும் உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். அங்கிருந்து தான் புகழ்கூறப்படுகிறது!

ராமச்சந்திரன், பெங்களூர்.

"மிஸ்டர் அப்பாலோ" எங்களூருக்கும் வருவாரா?

உங்களூருக்கா? பெங்களூருக்கா? அவசியப்படும்போது எல்லா ஊருக்கும் வரத்தான் செய்வார்!

• • •

இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு வெற்றியடைந்துள்ளதா என்ன?

வெற்றியடைந்தால் கி. பி. 2000—ல் மக்கள் தொகை 89 கோடி இருக்கும் என்று 4—வது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை மதிப்பிட்டிருக்குமா?

வே. வேலுச்சாமி, சிதம்பரம்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் எப்படி இருக்கும்?

ஜுண்டிகேடுக்கும் சிண்டிகேடுக்கும் குடுமிப்பிடி சண்டையாக இருக்கும் என்கிறீர்களா நீங்கள்,

• • •

1972ல் தி. மு. க. மத்திய அரசில் இடம் பெறுமா?

தி. மு. க. மத்திய அரசில் இடம் பெறக்கூடாது என்று எவராலும் தடுக்க முடியாதே! தலைமைப் பொறுப்பே, தி. மு. க. மீது திணிக்கப்படாமலிருந்தால் போதாதா?

சி. அண்ணாமலை, வேளாங்கண்ணி.

ராஜமானிய ஒழிப்பு மசோதா நிறைவேறுமா?

நீரோ, நானோ மன்னர்கள் இல்லை! மன்னர்கள் யாரும் நம் கட்சியிலும் இல்லை. விடுங்கள் விவகாரத்தை, ராஜாஜி கவனித்துக் கொள்வார்!

ராகவமூர்த்தி, காஞ்சிபுரம்.

பட்டுத் தொழிலுக்கு வரி விதிப்பதை, நெசவாளிகள் ஆதரிப்பார்களா?

நெசவாளிகள் ஆதரிப்பார்களோ, இல்லையோ, நெசவுத் தொழில் ஏகாதிபத்தியம் கொண்டுள்ள சில முதலாளிகள் நிச்சயம் எதிர்ப்பார்கள்!

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

தாக வருணித்திருக்கிறார். கட்சியின் தலைமை குறுகிய காலத்திலேயே "எஜமானத்துவ" முடையதாக இருக்கிறதென அவரால் உணர முடிந்திருக்கிறது. பட்நாயக்கைப் போல், எதையும் திட்டமிட்டுச் செயல்படும் இலக்கை இந்திராக் கட்சி, இன்னமும் எட்டிவிடவில்லை. ஏதோ அவசரத்தில் புள்ளிவைத்து புள்ளிக்கொரு கோடாக இழுத்து, அதனைக் கோலம் என்று கூறித் தீரவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது அக்கட்சி. முறையாக எந்த ஒன்றையும் அமைப்பு, ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை, அரசியல் கட்சிகள்தான் ஒரு அரசாங்கம் அமைக்கும் பணியில் ஈடுபடுவது என்பது நடைமுறை. இங்கென்ன வென்றால், ஒரு அரசாங்கம் அரசியல் கட்சி ஒன்றைக் கட்டப் படாதபாடுபட்டுக்கொண்டிருக்கிறது. கீழே இருந்துதான் யாரும் மேலே ஏறுவார்கள். மேலிருந்து கீழே ஏற நினைப்பவர்களும் இருக்கிறார்கள்! இதனால்தானோ என்னவோ, இடுகின்ற கட்டளைகள் யாவும், யாருக்கு இடப்படுகின்றது? எதற்காக இடப்படுகின்றது என்பன வந்தது என்னைப் பார்க்கட்டு நேரமற்ற வகையிலே கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன விளைவு என்ன? எஜமானத்துவ விமர்சத்தில் வந்து முடிகிறது! பரிதாபகரமான காட்சியல்லவா இது!

## தமிழகத்தின் வேட்கை!

கேரள நதி நீர்த் தகராறு தொடர்பாக, ஒரு முடிவுக்கு வருவதில் இருந்த முட்டுக்கட்டை நிலை பெருமளவுக்குக் குறைந்துவிட்டதென, தொடர்புடைய மூன்று முதலமைச்சர்களும் கூடிப் பேசிய பிறகு தலைமை வகித்த கே. எல். ராவ் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கத் தக்கதாகும், இன்னுமொரு மூன்று மாத காலத்தில் சுமுகமானதொரு உடன்பாடு ஏற்படும் வாய்ப்புக்கள் மலிந்து இருப்பதாகவும், இடைகாலத்தில், மூன்று மாநிலத்து பொறியாளர்களும் கூடி, சிலபல புள்ளி விவரங்களைத் தயாரிப்பார்கள் என்பதும் கூறப்பட்டிருக்கும் செய்திகளில் ஒன்று இந்தச் செய்தி, புதிய சில புள்ளி விவரங்களுக்கான செய்தியாகிவிடாமல், தகராறுகளைத் தீர்க்க முடிவுக்குக் கொண்டு வருவனவாக இருக்கவேண்டும் என்பதே தமிழகத்தின் வேட்கை!

★

12-ம் பக்கத் தொடர்ச்சி

**ஜி. ஜெகதீசன், காஞ்சிபுரம்.**
நான் மணமானவன்; இன்னொரு திருமணம் செய்து கொள்வதைத் தடுக்கின்ற சட்டத்தை உடைக்க விரும்புகிறேன்! முயலலாமா?

15 ஸ்டாண்டர்டு ஏகருக்கு மேல் யாரும் நிலம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பது சட்டம்! இதனைக்கூட உடைக்கத்தான் விரும்புகிறார்கள் சில பேர்! சட்டத்துக்குள்ளே சந்து பொந்துகள் இருக்குமில்லையா, நுழைந்து வெளிவர முடியுமா என்று முயன்று பாருங்கள்

**எஸ். அமிர்தலிங்கம், சென்னை.**
"நாய்விடு தூது இந்நாளில் என்பதற்கு விளக்கம் என்ன?

"சினிமா விஷயங்கள்" என்பதற்கெல்லாம் போய் விளக்கமோ விவரமோ கேட்கலாமோ? அவர்கள் ஒரு தனி உலகம் என்கிறார்கள். எல்லாமே தனியானதாகத் தானே இருக்கும்!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

றையை யாரும் தவறென்று கூறமுடியாது, ஆனால் அஜாய் முகர்ஜி பதவி விலகிய பின்னும், விலகுவதற்கு முன்னும் அங்கே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகள், ஒரு பொதுத் தேர்தல் நடைபெறும் சூழ்நிலையை உண்டாக்கித் தந்திருக்கின்றனவா என்றே பொதுமக்கள் ஐயத்தைக் கிளப்புகின்றனர்,

நக்சல் பாரிகளது விஷமத்தனம் கூண்டோடு ஒழிக்கப்படவில்லை, சில ஆயிரம் பேர் கைது செய்யப் பட்டும்கூட, விஷமிகள் பெரும் அளவுக்குப் பெருகி விஷமத்தனங்களிலும், காலித்தனங்களிலும் தீவிரம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றிற்கு வெளிநாடொன்றின் தூண்டுதலும் இருக்கிறதென்ற குற்றச்சாட்டும் பலப்பட்டிருக்கிறது.

முழுமையான அளவுக்குக் கலவரங்கள் ஒழிக்கப் படா முன்பு, பொதுத்தேர்தல் பற்றிய கோரிக்கையில் நியாயமிருப்பதாக ஏற்க முடியாது, பொதுத்தேர்தலையே குழப்பத்திலாழ்த்திவிட எடுக்கும் முயற்சிகள் இவை என்றும் கருத நேரிட்டுவிடும்.

மே. வங்கத்தை முதலில் கயவர்களின் கரங்களிலிருந்து மீட்டுவிட்டு, அதற்கு பிறகு தேர்தல் பற்றிப் பேசுவதுதான் அறிவுடைமையாயிருக்கும் என்பதுதான் மக்கள் கருத்தாக இருக்கக்கூடும்!

★


எத்தனையோ சுழல் வட்டங்களைக் கொண்டிருக்கிறது சமுதாயம்!

எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளின்கலவையாக கலங்கிக்கொண்டிருக்கிறது குடும்ப வாழ்க்கை!

'காஞ்சி'யில்!
தத்துவ மேதை
**T. K. சீனிவாசன் M.P.**
ஜூன் முதல் வாரத்திலிருந்து
எழுதுகிறார்!

இடை பிடையேதான் இன்பம் — எழுச்சி — ஏற்றம் என்பதெல்லாம்!!

புரையோடிய சமுதாயச் சிக்கல் ஒன்றைப் பின்னணியாய்க் கொண்ட புதிய தொடர் கதை!

# “வரலாற்றில் அண்ணா”

—சி. இராமகிருஷ்ணன், பி.ஏ.பில்.,—

இந்த நூற்றாண்டில், தென்னகம் தந்த மிகப் பெரிய தலைவர், எல்லோராலும் மிக உரிமையுடன் அண்ணா என அழைப்பட்ட ‘அறிஞர் அண்ணா’வாகும். சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் அவர் தமிழக அரசியலிலே, மிகச்சாமான்யராக நுழைந்து தமது சொல்வன்மையாலும், சிந்தனையைத் தூண்டும் எழுத்தாலும், நுண்மாண் நுழைபுலத்தாலும், செயலாற்றும் திறமையினாலும், மக்கள் தலைவனாக மலர்ந்து, ஆட்சி பீடத்தை உரியதாக்கி, இந்திய துணைக் கண்டத்தில் இணையற்ற அரசியல் வித்தகராக வளர்ந்தது வியப்பூட்டும் செய்தியாகும். அறிஞர் அண்ணா அவர்கள், கடந்த (3—2—1969) அன்று மீளாத் துயிலில் ஆழ்ந்த போழ்து, தமிழகம் ஆறாத் துயரால் வடித்த கண்ணீரும், நல்லிசைப் புலவரும், அரசியல் வித்தகரும். அவரது இழப்பைத் தாங்கவொண்ணாது விடுத்த செய்தியும், நாட்டில் வீரநடை போட்ட ஒரு மாபெரும் மனிதனை, வரலாறு தன் வயமாக்கிக் கொண்ட தென்பதை உலகுக்கு அறிவித்தன.

அவரது பூத உடலைத் தாங்கிச் சென்ற ஊர்வலத்தில் முப்பது இலட்சம் மக்கள், கண்ணீரும் கம்பலையுடனும் கலந்து கொண்டனர். பெரும் ராணுவ மரியாதையுடன், தலைநகராம் சென்னையின் வீதிகளிலே ஊர்வலம் நகர்ந்து அலை வீசும் கடற்கரை மணலிலே அமைந்த சமாதியில் அவரது பூத உடல் நிலையான அமைதியைப் பெறவைத்த காலை, பாமரரும், படித்தவரும், பெரும் பெரும் அரசியல் வித்தகரும், செந்நாப்புலவர் பலரும், கலைஞரும் கண்ணீர் வடித்த வண்ணம் சொல்லின் செல்வன், மக்கள் தலைவன், பெரும் பண்பாளன், எழுத்துலக மேதை, கலைஞருள் ஏறு, புலமை சான்ற பேராளன், முத்தமிழ்க் காவலன், ஏழை எளியவரின் இன் துணைவன், அரசியல் வித்தகன், சீர்திருத்தச் செம்மல் ஆகியோன் தனக்குச் செலுத்திய இறுதி அஞ்சலி, வரலாற்றில் மறக்க இயலாத நிகழ்ச்சியாகும்.

காந்தி அடிகள், நேரு பெருமகனார் ஆகிய இரு பெரும் தலைவர்கள் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்து, அவர்கள் மறைந்த பின்னர், அவர்களுக் கொப்ப வளர்ந்து, மண்



தேய்த்த புகழை விட்டு மறைந்தார் மாமேதை அண்ணா. காந்தி அடிகள் இம்மண்ணுலகை நீத்தகாலை, நாடு எத்தகைய துயரத்தை அடைந்ததோ, அத்தகைய துயரத்தையே அறிஞர் அண்ணா மறைவால், நாடும் மக்களும் அடைந்தனர். நாடும் மக்களும் போற்றிய உத்தமன் அண்ணா அவர்கள் மறைந்த காலை மிகச் சாமானிய மக்கள் உற்ற துயரத்தின் ஆழம் மிகப் பெரியது, அளவிடற்கரியதாகவே இருந்தது. இத்தகைய ஆழ்ந்த துயரம் மக்கள் அடையக் காரணம் என்னை? பாமர மக்கள் தலைவன் அண்ணாவுக்கு, வரலாற்றில் உரிய இடம் என்ன என்பதை ஆராய்ந்து தெளிவதின் மூலமே, மக்கள் உற்ற துயரத்தின் ஆழத்தை ஓரளவு புரியக் கூடும். தமிழக வரலாற்றில், ஒப்பற்ற உயரிய இடம் அவர்க்குரியது என்பதை நல்லோரும் வல்லாரும் உணர்கின்றனர். அரசியல் கண்ணோட்டமும் விருப்பு வெறுப்புமின்றி, பெருந்தகை அண்ணா அவர்கள் சமுதாய நலனுக்கும், தமிழுக்கும், கலைக்கும், இலக்கியத்துக்கும், அரசியல் வளர்ச்சிக்கும், மக்களிடையே வளர்ந்துள்ள பேதங்களை நீக்கவும் ஆற்றிய பணி என்ன, அப்பணியின் விளைவு என்ன என்பதை, வரலாற்றுப் பின்னணியில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொதுவாகத் தமிழகத்தில் வரலாற்று உணர்வு குறைவு என்பதே எல்லோரும் கொண்ட முடிவாகும் பழம் பெரும் நாகரிகத்தையும், உயர் தனிச் செம்மொழியையும் கொண்டது தமிழ்நாடு. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி” எனப்பெருமிதத்துடன் கூறுவதைக்காண்கிறோம். இத்தகைய பழம் நாகரிக வளத்தினையும், பெரும் மொழியினையும், அம்மொழியிற் பெரும் புலமை பெற்ற நல்லிசைப் புலவரையும் கொண்ட தமிழ் நாட்டில், முறையான நாட்டு வரலாறும் இல்லை; நாட்டில் தோன்றிய அறிஞர் பெருமக்களின் வாழ்க்கையைப் பற்றிய தெளிவான, ஒப்புக்கொள்ளக் கூடிய செய்தியுமில்லை தமிழகத்தைப்போன்றே, பழம் நாகரிகத்தின் மடியில்தவழ்ந்த ரோம்,கிரேக்கம்,சீனம்போன்ற நாடுகளின் வரலாறு தெளி

யாக வரையறுக்கப்பட்டு, இன்ன காலத்தில், இன்னவனால், இத்தகைய அரசு செயல்பட்டு வந்தது என்பதை உலக மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது. அந்நாடுகளின் பெருமக்கள் அரசியல் விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கையையும், அவர்கள் மக்களுக்கு ஆற்றிய பணியையும், படைத்த காவியங்கள், இலக்கியங்களைப் பற்றியும், சமுதாயம் அடைந்த பலனையும் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டு அவை வரலாற்றின் இனிய காவியங்களாகக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பயிலப்படுவதை நாம் காண்கின்றோம். மன்றங்களின் நடுவிலே, வீதிகளின் ஓரங்களிலே, மக்கள் பலர் கூடும் விழாக்களிலே நின்று, சாக்ரடீசு தன் குரலை உயர்த்தி" வாருங்கள் வாருங்கள்; நான் தரும் அறிவுரையைக் கேளுங்கள்" என்று பிளாட்டோ காட்டும் காட்சி கிரேக்க மக்களுக்குப் பெருமிதத்தை உண்டுபண்ணும் என்பதில் ஐயமில்லை. சாக்ரடீசையும் இன்னும் உலகில் தோன்றிய பெருமேதைகளையும் மிஞ்சும் பேரறிவு படைத்த பெருஞ்சிந்தனையாளன் வள்ளுவப்பெருந்தகையின் வாழ்க்கையைப் பற்றி நமக்கு என்ன தெரிகின்றது? "வள்ளுவன் என்பான் ஓர் பேதை, அவன் வாய்ச்சொல் கேளார் அறிவுடையார்" என்று யாரோ ஒரு புலவன் எழுதிவைத்த பாட்டை வைத்துக்கொண்டு, உலக மக்களெல்லாம் உய்யப் பொதுமறை செய்த சிந்தனைச் சிற்பியை, அவர் வள்ளுவ வகுப்பைச் சேர்ந்தவரா என்று தொடங்கிய ஆராய்ச்சி இன்னும் முடிவடையவில்லை. வள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த காலமே இன்னும் விவாதத்துக்குரிய தொன்றாக இருக்கின்றது. "கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்" என்று சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு அடியைப் பின்பற்றி, இலங்கை மன்னன் கயவாகு காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டு, சிலப்பதிகார காலமும் அதுவே. ஆசிரியர் இளங்கோவால் போற்றப்படும் அளவுக்கு வளரக் குறைந்தது, இரண்டு மூன்று நூற்றாண்டுகள் சிலப்பதிகாரத்துக்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும் என ஆராய்ச்சி செய்து திருக்குறள் காலத்தைக் கணிக்க முற்பட்டிருக்கின்றனர். தமிழகத்தின் ஒப்பற்ற மாமேதையின் காலம், அவர்தம் வாழ்க்கை பற்றியும், உலகத்துக்கு ஒழுக்கத்தைப் போதித்த பெருந்தகையின் அன்றாட வாழ்க்கையில் கடைப் பிடித்த விதிகள், முறைகளைப் பற்றியும், அவர் காலத்திய மன்னர் அரசியல் நெறி, சமுதாய அமைப்பு, இன்னும் சமகாலத்திய நல்லிசைப் புலவர் பற்றியும் முறையாக எழுதப்பட்டு எதிர்கால மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தால், தமிழகத்தின் பெருமை இன்னும் பன்மடங்கு உலக அரங்கிலே ஒளி வீசும் என்பதில் ஐயமில்லை.

மணிமேகலை விழாவறை காதையில் வரும்,

"மன்னன் கரிகால் வளவன் நீங்கிய நாள்
இந்நகர் போல்வதோர் இயல்பினது
ஆகி..." என்ற

இரண்டு அடிகள் பல எண்ணங்களை வரலாற்று உணர்வுடன் படிப்போர் மனதில் தோன்றச் செய்யும். மன்னன் கரிகால் பெருவளத்தான், பகைவரை வெல்லக் கருதி பூம்புகாரை நீங்கி, வடதிசை நோக்கிப் போன நாளிலே, புகார் பொலிவிழந்து போயினதுபோல, என்பது இந்த வரிகளின் பொருள். கரிகால்வளவன் தமிழகத்தின் வீரத்துக்கும், ஆற்றலுக்கும் எடுத்துக் காட்டாக நின்று, புகழ் மணம் கமழ வாழ்ந்த மாவீரன் கரிகாலன் எந்நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான், பெற்ற வெற்றிகள் என்ன என்பது பற்றி சாத்தனார் தம் மணிமேகலையில் கொஞ்சம் விரிவாகக் கூறியிருந்தால் இரண்டாயிரம் ஆண்டுகள் உருண்டோடிய பின்னர், படிக்கும் நான் பெருமிதமும், களிபேருவகையும் அடைவதில் நியாயமுண்டு. சாத்தனாரின் வரலாற்று உணர்வையும் பாராட்டியிருப்போம். மணிமேகலையில் கதைக் கொவ்வாத பல சம்பவங்களை (சக்கரவாளக் கோட்டம், ஆபுத்திரன் காதை போன்றவை) தேவையற்றுவிரித்துச்சொன்னவர், இவ்வரலாற்றுப்பெரும்நிகழ்ச்சியை இரண்டு வரிகளில் மாத்திரம் கூறியது, அந்தோ தமிழகமே, நீ வரலாற்று உணர்வே அற்று வாழ்ந்து விட்டனையே என்றே கூறத் தோன்றுகின்றது. மாறாக, மாவீரன் ஜூலியசு சீசரின் வாழ்க்கையையும். "சென்றான், கண்டான், வென்றான்" என்ற அவனது பெருமித வெற்றி வரலாற்றையும், தெளிவாக, ஐயத்துக் கிடமின்றி, வருங்கால மக்கள் பார்த்து இன்புறுமாறு எழுதி வைத்திருக்கின்ற ரோம் நாட்டு நல்லிசைப் புலவரின் வரலாற்றுணர்வை எவரும் பாராட்டவே செய்வர்.

இப்பெருங் குறையை நம் தமிழக நல்லறிஞர்கள் உணர்ந்தாக வேண்டும். "இன்றைய நிகழ்ச்சிகள், நாளைய வரலாறு" என்ற இந்த மிகச் சாதாரண உண்மையை உணர்ந்து தமிழகத்தின் முறையான வரலாற்றைத் தொகுத்தெழுதப் பேராசிரியர்களும். அவர்களை ஊக்குவிக்க, அரசும் முன்வருதல் மிகத் தேவையானதொன்றாகும், இங்கு ஒரு சம்பவத்தை நினைவுகூர்வது நல்லதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில், ஆங்கில நாட்டில் ஒரு சமயம் கொடால்ப்பின் என்ற பிரதம மந்திரி ஆட்சியை நடத்திவந்தார், மால்பர்ரோ என்ற ஆங்கில மாவீரன் ஐரோப்பாவில் பிளன்கீம் என்ற இடத்தில் பெரும்போர் நடத்தி, ஆங்கில நாட்டின் கீர்த்தியை நிலைநாட்டினான். இந்த வெற்றியைப் பாராட்டிப் புகழ்க் காப்பியம் எழுப்ப விரும்பிய கொடால்ப்பின், அன்று மிகப் புலமை வாய்ந்தவனும், ஆனால் புரப்பாரின்றி மங்கிய வைரம்போல், குடிசையில் வாழ்ந்த சோசப் அடிசனை அணுகி, காவியம் எழுத வேண்டினான். அடிசனும் மகிழ்ந்து பெருங் காப்பியம் ஒன்றை ("கேம்பைன்")ப் பாடினான் எனக் கூறுவர்.

கற்றறிந்த மூதறிஞர், புலமை மிக்க நல்லிசைப் புலவர். பேராசிரியர்கள், வரலாற்றைப் படைத்து மறைந்த அறிஞர் அண்ணாவின் ஒளிமிக்க வாழ்வைப் பற்றியும், இன்னும் நம் காலத்தில் வாழும் நல்ல தலைவர்கள், அரசியல் வித்தகர்கள், கவிஞர்கள், அறிவியல் வல்லுநர்கள் போன்றோரின் வாழ்க்கையையும், துணிந்து முறையான, ஒழுங்கான, சிறப்பான எழுத்து ஓவியங்களைப் படைக்க முன்வருதல், வருங்கால மக்களுக்கு நாம் செய்யும் கடமையாகும்.

மிகச் சாதாரணப் புலமை படைத்தவர்கள், ஏன் புலமையே இல்லாதவர்களுங்கூட, பெருமக்களின் வாழ்வை எழுதி வருவது, காலப்போக்கில் அவை அழிந்துபடும். விளைவு வருங்கால மக்கள். இன்று நம்மைப் போலவே, இருட்டில் தடவி நிற்கும் நிலை ஏற்படும் என்பதை உணரவேண்டும், ஒரு சிறந்த தலைவனைப் பற்றியோ, அறிஞனைப் பற்றியோ இன்னொரு செந்நாப் புலவர் எழுதுவது அவர்க் கிருக்கும் சிறப்பைக் குறைக்காது; மாறாக கூட்டியே காட்டும். மெக்காலே என்ற மாபெரும் எழுத்தாளன், சோசப் அடிசன் என்ற எழுத்துலக மேதையின் வாழ்க்கையைச் செம்மையாக எழுதினதால், மெக்காலேயின் சிறப்பு உயர்ந்ததே தவிர குறையவில்லை, யாழை மீட்டுகின்றவன், யாழின்

காஞ்சி 24—5—70 REGD. No. M.8326

நுட்பங்களை அறிந்தவனாகவும், யாழின் தரத்துக்கு ஒத்தவனாகவும் இருந்தால்தான், யாழிலிருந்து இனிய ஓசை எழும். நாமும் செவியார, உளமாரக் கேட்போம். இல்லையேல், யாழிருந்தும் மீட்டுகின்றவன் திறமின்மையால், யாழ் பயன்படாது போகும். உலக வரலாறு என்பது உலகில் தோன்றிய பெருமக்களின் சாதனைகளின் தொகுப்பேயாகும். என்று தாமசு கார்லையில் என்ற ஆங்கில ஆசிரியர் தமது "வணக்கத்துக் குரிய பெருமக்கள்" என்ற நூலில் கூறியிருக்கின்றார். நமது பொய்யில் புலவர் திருவள்ளுவரும்,

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

எனக் கூறுவது சிந்திக்கத்தக்கது.

கடந்த முப்பதாண்டைய தமிழகத்தின் வரலாற்றை நோக்குவோமாயின் பல துறைகளில், குறிப்பாகத் தமிழ்த் துறை, பேச்சுத் துறை, இலக்கியத் துறை, கலைத் துறை, பகுத்தறிவுத் துறை, அரசியல் துறை போன்றவைகளில் அமைதியானதொரு புரட்சி நடந்திருப்பதைக் காண்கிறோம். இந்த அமைதியான புரட்சியில், பெருமகன் அண்ணாவின் பங்கு மிகப் பெரியது என்பதுடன், புரட்சிக்கு வித்திட்டவரும் அவரே, புரட்சியை வழிநடத்திச் சென்று, அது வெற்றியடைய வழி வகுத்த தலைமகனும் அவரே எனத் துணிந்து சொல்லலாம். இதை நினைந்துதான், கவிஞர் கண்ணதாசன் அண்ணாவை "குலமுதல் தலைவா" எனப் போற்றினார். கலைஞர் கருணாநிதி "இது அண்ணாவின் சகாப்தம்" என விளம்பினார்.

"அண்ணா த்துரை யென்னும்
அண்ணல் தமிழ்நாட்டு
வாய்மொழியில்—பண்ணவன்
சிற்பன் எழுத்தோவியத் தில்
செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமி

யென்றாடு" என அழகு தமிழில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. பாடினார். சர்தார் உஜ்ஜல் சிங், தமிழக ஆளுநர், அண்ணா மறைந்த பொழுது மனம் கசிந்து, "அண்ணாவின பொது வாழ்க்கை கடந்த முப்பது ஆண்டுகளில், அரசியல் பத்திரிகைத் தொழில், இலக்கியம், கலை, சமுதாய சீர் திருத்தம் ஆகிய துறைகளில் மிகப் பெரும் வெற்றிகளைத் தேடித் தந்திருக்கின்றது" என்று கூறுகின்றார். அண்ணாவின் மறைவுடன்" ஒரு புகழ்மிக்க அத்தியாயம் முடிகின்றது என இந்தியத் துணைக் கண்டத்தில் மிக செல்வாக்கான நாளிதழ் ஒன்று கூறுகின்றது. இத்தகைய புகழ் படைத்த சாகப்தத்தின் தலைவன் அண்ணாவின் வாழ்வு பல தொல்லைகளிடையே தொடங்கி, உச்சியை அடைந்த காதை மிகவும் சுவையானதாகவும், படிப்போர் தம் மனதில் இருத்தி வைக்கக் கூடிய பல பெரும் சம்பவங்களையும் கொண்டதென்பதில் எவ்வித ஐயமுமில்லை "திரு. அண்ணாதுரையவர்களின் எழுச்சி ஒரு கவர்ச்சி கரமான கருப்பொருளை வரலாற்று ஆசிரியர்களுக்கு வழங்கப் போகின்றது"—என்கிறார் இந்து ஏடு. அண்ணாவின் சுவைமிக்க வீர வாழ்க்கையைப் பல கோணங்களில் ஆராய்ந்து அண்ணாவின் முழு உருவை காண்போம்.

பேரறிஞர் அவர்களைப் பற்றி "அண்ணாத்துரை யென்னும் அண்ணல்" என்றார் திரு. வி. க. அண்ணா புகழ் மண்டிக் கிடக்கும் காஞ்சியிலே, 1909 செப்டம்பர் 15ம் நாளில் வசதியற்ற எளிய குடும்பத்தில் பிறந்தார். பிற்காலத்தில், "நான் சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்" என்றே அண்ணா கூறியிருக்கின்றார். தமிழ் என்றால் இனிமை என்னும பொருள், இனிமை மிக்க காஞ்சி என்று குறிப்பிட "தமிழ சேர் காஞ்சி" என்று புலவர் பாடுவர். தமிழ்த் தாய்க்கு இந்தியால் உற்ற பேராபத்துக்களைக் களைய அறப்போர் புரிந்த தளபதி அண்ணாவையும், தமிழ்சேர் காஞ்சியே நீ முத்தமிழ் காக்கச் சேர்த்துக் கொண்டனையோ? அண்ணாவின் பள்ளி வாழ்வு மிகச் சாதாரணமாகவே இருந்தது. 'இரண்டு தடவை பள்ளி இறுதி வகுப்பின் (S. S. L. C.) தேர்வில், தவறிப்போய் பிறகு தான் தேர்ச்சி பெற்றேன்" என்று அண்ணாவே ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கின்றார். தனது ஆற்றலால் பெரும் பொருளை ஈட்டி "கல்வி ஒருவர்க்குச் செல்வம், மாடல்ல மற்ற யவை" என்ற வள்ளுவ ஆசானின் சொல்லால் ஈர்க்கப்பட்டுத் தன் பொருளை யெல்லாம் கல்வி வழங்கும நிலையங்களாக மாற்றிய வள்ளல் பச்சையப்பன் பெயரால் விளங்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரியில், தமிழகத்தின் பெருவாழ்வுக்குத் தன் அறிவு, ஆற்றலை வாரி வாரி வழங்கிய அண்ணா கற்று முதுகலை (எம். ஏ.) என்னும் பட்டத்தைப் பெற்றார். கல்லூரி நாட்களிலேயே, அறிவுத் தாகம் பொங்க, கன்னிமாரா நூல் நிலயம், பல்கலைக் கழக நூல் நிலையங்களில் இருந்த பல அரிய நூல்களைப் படித்துத் தனது அறிவைக் கூர்மையாக்கினார்.

கல்லூரியில் நடந்த எல்லா விவாத அரங்குகளிலும் பங்கேற்று விவேகத்தையும் [illegible] பெற்று எழிலோவியமாகத் திகழ்ந்த தமிழகம் இன்று புகழ் மங்கி, குலைந்துபோன ஓவியம் போலான தமிழகத்துல் இழந்த புகழையும் சேர்த்து குலைந்த ஓவியத்தை மீண்டும் எழிலோவியமாகத் தீட்டத் தனது அறிவையும் செயலாற்றலையும் கல்லூரியிலேயே அண்ணா தீட்டிக் கொண்டார்போல.

'முதுகலைச் செல்வன் (எம். ஏ) என்ற பட்டத்துடன் வெளிவந்த பெருந்தகை அண்ணாவை, அக்காலத்தில் பெரும் செல்வமும் கீர்த்தியும் பெற்றிருந்த செட்டி நாட்டரசர் முத்தையா அவர்கள் தமது ஊன் பகு கருமத் தலைவராக ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தார். அண்ணா அந்த அலுவலை ஏற்க விரும்பாது கல்லும் முள்ளும் நிறைந்த பொது வாழ்வையே ஏற்று ஒடுங்கிக் கிடந்த திராவிடர்களின் விடுதலைக்குத் தம்மை அர்பணித்தார். அண்ணாவின் இந்தத் தியாகம் நேரு, போசு போன்ற பெருமக்கள், தாம் ஐ. சி. எஸ். பட்டம் பெற்றதன் விளைவாக அளிக்கப்பட்ட, உயரிய பதவிகளை உதறித் தள்ளி, நாட்டின் விடுதலைக்கே தம்மை ஈடுபடுத்திய செயலையே நமக்கு நினைவுபடுத்துகின்றது.

(அடுத்த இதழில் முடியும்)

சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்
அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.